# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 508 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 14ஆம் திகதி புதன்கிழமை (27.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 25 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## நாளை ஹர்த்தால்; பொதுச் சேவைகள் பாதிக்கப்படலாம்!

நாடளாவிய ரீதியில் நாளைய தினம் ஹர்த்தால் மேற்கொள்ளப் படவுள்ளதாக ஒன்றிணைந்த அத்தியாவசிய சேவைகள் சங்கம் அறிவித்துள்ளது.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வலியுறுத்தி இந்த ஹர்த்தால் முன்னெடுக் கப்படவுள்ளது. 02 பக்கம்

## வேலை நிறுத்தத்தில் தோட்டத் தொழிலாளர்கள் கலந்துகொள்க!

தமிழ் முற்போக்கு கூட்டணி அழைப்பு

03 பக்கம்

# பதவி விலகேன்; விலக்கவும் முடியாது!



பிரதமர் மஹிந்த நேற்று சூளுரை

**யோ.தர்மராஜ்**

நான் பிரதமர் பதவியிலிருந்து விலகவும் மாட்டேன். என்னை யாரும் பதவி விலக்கவும் முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களிடம் அழுத்தமாக தெரிவித்ததாக ஆளுந்தரப்பு... 02 பக்கம்

## இடைக்கால அரசில் இணையமாட்டேன்

அதைவிட அரசியலில் இருந்து வெளியேறுவது நல்லதென்கிறார் சஜித்



**யோ.தர்மராஜ்**

இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக கொள்ளையடித்த பணத்தை கொண்டுவர முடியாது. மாறாக, நல்லவர்களும் கொள்ளையர்களாகவே மாற வேண்டிவரும். 02 பக்கம்

## இலங்கையின் நிதிக்கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும்

சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

தற்போதைய நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக இலங்கையின் நிதிக்கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின்... 02 பக்கம்

## கடனை மீளச் செலுத்த தவறும் நாடாக பெயரிடப்பட்ட இலங்கை

STANDARD &POOR'S

தெரிவுசெய்யப்பட்ட கடனை திருப்பிச்செலுத்த தவறும் அபாயமுள்ள நாடாக, Standard and poor's (S&P) சர்வதேச நிதித் தரப்படுத்தல் நிறுவனம், இலங்கையை பெயரிட்டுள்ளது. 02 பக்கம்

## ஐக்கிய மக்கள் சக்தியின் வெகுஜன பேரணி கண்டியிலிருந்து ஆரம்பம்



03 பக்கம்

## அரசுக்கும் சஜித்துக்கும் இடையில் டீலா?



கேட்கிறார் வாசு

02 பக்கம்

## உஷ்



கோட்டாபய, மஹிந்த, சமல், பெசில் உட்பட்டோர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நீண்டநேரம் பேச்சு நடத்தியுள்ளனர்.

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த விலகுவது நல்லதென கோட்டாவும், சமலும் கூறினராம். ஆனால் அப்படி விலகத் தேவையில்லை. நாடாளுமன்றம் கூடும் முன்னர் ஆளுங்கட்சிக்குத் தேவையான பெரும்பான்மையை உறுதிப்படுத்துகிறேன் என்றாராம் பெசில். இப்போது எம்.பிக்களுக்கு செல்வாக்கு, கிராக்கி அதிகரித்திருக்கும் அல்லவா?

## இடைக்கால அரசு நியமனத்திற்கு ஜனாதிபதி எப்போதும் தயார்!

அமைச்சர் நாலக்க கொடஹேவா தெரிவிப்பு

**யோ.தர்மராஜ்**



நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தை மாற்றுவதற்கு தயாராக இருந்தால் அதற்கு ஜனாதிபதி எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கமாட்டார். இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி எப்போதும் தயாராக இருக்கின்றார். எப்போது எப்படி நடக்கும் என்பது தெரியவில்லை என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கலாநிதி நாலக்க கொடஹேவா தெரிவித்தார். 02 பக்கம்

## அடுத்த சில மாதங்களில் மக்களுக்கு நிதி மானியம்

அரசின் எதிர்பார்ப்பை வெளியிட்டார் அமைச்சர் ரமேஷ்

**யோ.தர்மராஜ்**



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்வதற்காக நிதி அமைச்சர் பெரும் முயற்சிகளை எடுத்து பல நாடுகள் மற்றும் பல தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



டீல் இல்லா அரசியல் உப்பில்லா உணவு போல... எங்கும் டீல் எதிலும் டீல்...




# கடனை மீள் செலுத்த சீனா ஆலோசனை

## அமைச்சர் கொடஹேவா



**(யோ. தர்மராஜ்)**

கடன் மறுசீரமைப்புக்கு பதிலாக, தற்போதிருக்கும் கடனை மீளச் செலுத்துவதற்காக மற்றொரு கடன் திட்டத்தை வழங்குவதற்கு சீனா புதிய யோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நாலக்க கொடஹேவா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அவசர நிதி தேவைக்காக எங்களுக்கு 4 – 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையாகவுள்ளன. இதனாலேயே, புதிய நிதி அமைச்சரான அலி சப்ரி, சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மானியத்திற்கு அப்பால், நாட்டில் கடன் மறுசீரமைப்புக்கான அவசியம் காணப்படுவதால், எங்களால் கடனை மீளச் செலுத்த முடியாத நிலைமை இருப்பதாக கடன் கொடுநர்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

இந்த நிலையில், சீனா பல நாடுகளுக்கு கடன் கொடுத்துள்ளதால், ஒரு நாட்டுக்கு மாத்திரம் கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளித்தால் அது ஏனைய நாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நிலைப்பாட்டிலேயே சீனா இருக்கிறது.

எனவே, கடன் மறுசீரமைப்புக்கு பதிலாக, தற்போதிருக்கும் கடனை மீளச் செலுத்துவதற்காக மற்றொரு கடன் திட்டத்தை வழங்குவதற்கு யோசனை முன்வைத்துள்ளது. இது ஆரம்பகட்ட பேச்சுவார்த்தையிலேயே இருக்கின்றது – என்றார்.

## மீண்டும் நீதியமைச்சரானார் நிதியமைச்சர் அலிசப்ரி

நிதியமைச்சர் அலி சப்ரி, நீதியமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைய, ஜனாதிபதி மாளிகையில் நேற்று மாலை அவர் நீதியமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

நிதியமைச்சுக்கு மேலதிகமாக அவருக்கு நீதியமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு அனைத்துக்கட்சி அமைச்சரவை

### தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்து

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழலைத் தீர்ப்பதற்கு இடைக்காலத் திட்டத்தைச் செயல்படுத்த நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவை அல்லது அத்தகைய கட்டமைப்பை அமைக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரசியல் கட்சிகளின் பலதரப்பட்ட கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளையில், நாடாளுமன்றத்தில் அல்லது வேறு ஏதேனும் இடைக்கால வடிவில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவத்துடன் கூடிய அமைச்சரவையை அமைப்பதன் தேவை குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஒரு ஆலோசனை நடவடிக்கையில் இணைந்து செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## இடைக்கால அரசில்...

எனவே, இடைக்கால அரசாங்கத்துடன் இணைவதை விட நான் அரசியலிலிருந்து வெளியேறுவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (26) ஆரம்பமான பாத யாத்திரையின் ஆசிர்வாத நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சியின் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கே எங்களுக்கு மக்களாணையுள்ளது. மக்களாணை இல்லாது ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் ஆட்சி அமைப்பதற்கோ, நாட்டை ஆள்வதற்கோ தயாரில்லை. அவ்வாறு செய்யவும் முடியாது.

இது அரசியல் சூதுவோ, அரசியல் சங்கீத நாற்காலி விளையாட்டோ அல்ல. உங்களுடைய ஆடையை நான் அணிந்துகொள்கின்றேன். என்னுடைய ஆடையை நீங்கள் அணிந்துகொள்ளுங்கள். உங்களுடைய பதவியை நான் வகிக்கின்றேன். என்னுடைய பதவியை நீங்கள் வகிக்கலாம். இவர் ஜனாதிபதி, இவர் பிரதமர் எனக் கூறிக்கொண்டிருக்க முடியாது. இங்கு என்ன நடக்கின்றது. இது 225 பேருக்கிடையில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல் என்பதுடன், 20 இலட்ச மக்களையும் மறந்துவிட்டு முன்னெடுக்கப்படும் கூட்டு சூழ்ச்சியாகும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, குற்றப்பிரேரணை என்பது ஒன்றாகும். அரசாங்கம் அமைப்பது என்பது மற்றொரு விடயமாகும். காலி முகத்திடல் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் மக்கள் போராடுகின்றனர். அவர்கள், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்பதுடன், கொள்ளையர்களை பிடிக்க வேண்டும், கொள்ளையடித்த பணத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்தால் இவற்றை செய்ய முடியுமா? பொறுப்புகளை பொறுப்பேற்பதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால், அமைச்சரவைக்குள் இடம்பெறும் சூது அல்லது சூழ்ச்சியின் ஊடாக அல்லாது, மக்களாணையுடன் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக கொள்ளையடித்த பணத்தை கொண்டுவர முடியாது. மாறாக, நல்லவர்களும் கொள்ளையர்களாகவே மாற வேண்டிவரும். எனவே, இடைக்கால அரசாங்கத்துடன் இணைவதை விட நான் அரசியலிலிருந்து வெளியேறுவேன். இந்த வார்த்தையை ஒருபோதும் மாற்றிக்கொள்ள மாட்டேன் - என்றார்.

## அரசுக்கும்...

**யோ.தர்மராஜ்**

முழு நாடும் அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறு கூறும்போது, ஐக்கிய மக்கள் சக்தி, நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதை காலம் தாழ்த்துவதை பார்க்கும் போது, அரசுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் டீல் இருப்பதாகவே தோன்றுகிறதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பொரளையிலுள்ள என்.எம் பெரேரா நிலையத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு வாரங்களுக்கு முன்னரிலிருந்து பிரசவிக்கவிருந்த குழந்தையே நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும். எனினும், அது இதுவரை வெளிவரவில்லை. இதற்கு காரணம் என்ன என்பதை ஆராய வேண்டியுள்ளது. அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 11 பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த 50 வரையான உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திடுவதற்கு தயாராக இருக்கின்றோம் என்பதை ஐக்கிய மக்கள் சக்தியிடம் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளோம்.

எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்த்து காத்திருக்கின்ற நிலையில், இதுவரை அது எங்களின் கைகளுக்கு கிடைக்கவில்லை. இதற்கான காரணம் என்ன என்பதை தேடிப்பார்க்க வேண்டியுள்ளது.

இவற்றை ஒருபுறம் தள்ளிவைத்து விட்டு, மே தினத்தில் பாரிய போராட்டத்தை நடத்தி அரசாங்கத்தை கவிழ்ப்பதாகக் கூறும் எதிர்க்கட்சிக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணையை கைச்சாத்திட்டு கையளிப்பதற்கு முடியாதது ஏன்? இதில் ஏதோவொரு இரகசியம் இருப்பதாகவே எனக்கு தோன்றுகிறது.

அரசுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் ஏதோவொரு டீல் (ஒப்பந்தம்) இருப்பதாகவே எனக்கு தோன்றுகிறது. முழு நாடும் அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறு கூறும்போது, அது நடக்கவில்லை என்றால் ஏதோவொரு டீல் இருப்பதாகவே தோன்றுகிறது.

போராட்டங்களால் அரசாங்கத்தை வீழ்த்துவோம் எனக் கூறுவதிலும் எனக்கு சந்தேகம் இருக்கின்றது. நம்பிக்கையில்லாப் பிரேணை கொண்டுவந்தாலும் அதில் கைச்சாத்திடுவதற்கு எதிர்க்கட்சிகள் முன்வர வேண்டும்.

தற்போது யார் பிரதமர், யார் ஜனாதிபதி என்ற முரண்பாடு ஏற்பட்டுள்ளது. ஆனால், அது எங்களுக்கு தேவையற்றது. எங்களுக்கு அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதே முக்கியம். ஆனால், இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.

அரசாங்கத்துடன் இணைய எங்களுக்கு விரும்பமில்லை. கொள்ளையர்களுடன் ஆட்சி அமைக்க முடியுமா? என சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார். அவ்வாறாயின், சஜித் தொடர்பாக கூறுவதற்கும் எங்களிடம் நல்லதொரு துரும்பு இருக்கின்றது. எங்களுக்கு பிரதமர் பதவியோ ஏனைய பதவிகளோ தேவையில்லை. இடைக்கால அரசாங்கத்தில் யார் பிரதமர் என்றாலும் எங்களுக்கு பிரச்சினையில்லை.

தேர்தலையே ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்றது. தேர்தல் வந்தால் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரியும். அவ்வாறான நிலையில், மொட்டுவில் ஒரு தரப்பை தருவதாக பெசில் கூறுகின்றார். அதனாலேயே ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறு காலம் தாழ்த்துகின்றது. சஜித்தும் பெசிலும் ரொட்டியை புரட்டிக்கொள்கின்றனர் – என்றார்.

## பதவி விலகேன்...

அமைச்சர் ஒருவர் 'தமிழன்' செய்திகளிடம் நேற்று (26) தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர் சபைக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என ஆளுந்தரப்பிலிருந்து வெளியேறிய மற்றும் அதிருப்தியுள்ளவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், அவருக்கான ஆதரவை வெளிப்படும் முகமாகவே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலின்போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அல்லது அரசாங்கம் பதவியிலிருந்து விலக வேண்டிய தேவை இல்லை என மாகாண சபை உறுப்பினர்கள் சபையினால் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை அவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அறிவிப்பதற்கும் தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு முகம் கொடுத்து முன்னோக்கிச் செல்வதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதே பதவியில் பதவி வகிக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் உருவத்தை வைத்து நாடாளுமன்றத்திற்கு வருகைத் தந்தவர்கள் சுயாதீனமாக செயற்படுவது பொருத்தமற்றது என்றும் மாகாண சபை உறுப்பினர்கள் சபை தெரிவித்துள்ளது.

69 இலட்ச மக்களின் பெரும்பாலானோர் பிரதமருடனே இருக்கின்றனர். எனினும், சமூக ஊடகங்கள் மற்றும் பிரதான ஊடகங்களில் வெளியிடும் தவறான கருத்துக்களினாலேயே தற்போது மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மாகாண சபை உறுப்பினர்களின் சபை பிரதமருக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமரின் பெயரை விற்பனை செய்தே நாங்கள் நாடாளுமன்றத்திற்கு வந்தோம். எனவே, அவரின் கீழே எங்களுடைய அரசியலும் ஆட்சியும் இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவற்றை செவிமடுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தான் பிரதமர் பதவியிலிருந்து விலகவும் மாட்டேன். என்னை யாராலும் விலக்கவும் முடியாது என தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்பட்ட எரிபொருள் வரிசைகளை தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம். எரிவாயுவிற்கான வரிசைகளையும் நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம் எனவும் பிரதமர் இதன் போது தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதால் அதனை கட்டுப்படுத்துவதற்கும் நாங்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்துவருவதோடு, டொலரின் பெறுமதி குறைவடையும் போது பொருட்களின் விலைகளும் குறைவடையும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

எது எவ்வாறாயினும், என்னுடைய தலைமையின் கீழே இந்த ஆட்சியும் இனி அமையும் ஆட்சியும் கொண்டு செல்லப்படும். சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுக்க தயாராகவே இருக்கின்றோம். எனவே, நான் ஒருபோதும் பதவி விலக மாட்டேன் என அழுத்தமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக ஆளுந்தரப்பு அமைச்சர் ஒருவர் 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தார்.

## இலங்கையின் நிதிக்கொள்கை...

ஆசிய பசுபிக் பிராந்திய பதில் பணிப்பாளர் ஆன் மேரி, ரொய்ட்டர்ஸ் செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

நெகிழ்வுத் தன்மையுடன் அந்நிய செலாவணி மாற்றுவீதத்தை பேணிச்செல்ல வேண்டியதன் முக்கியத்தை சுட்டிக்காட்டியுள்ள அவர், பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை நிதிக் கொள்கையை கடுமையாக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வார இறுதி நாட்களில் இலங்கை பிரதிநிதிகளுடன் சாதகமான கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாளை ஹர்த்தால்:...

மேலும், அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் ரயில்வே தொழிற்சங்கங்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளன.

அதற்கமைய, இன்று 27 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் நாளை 28ஆம் திகதி நள்ளிரவு வரையில் இவ்வாறு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு பிரதான தொழிற்சங்கங்கள் பலவும் தமது ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மகாநாயக்க தேரர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை அமுல்படுத்தாவிட்டால் அடுத்த வாரம் நாடு தழுவிய ரீதியில் பஸ் சேவை புறக்கணிப்பை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரித்துள்ளார்.

நடப்பு அரசாங்கத்திடம் பொருளாதாரத்தை மீட்பதற்கான சரியான திட்டம் எதுவும் இல்லாத நிலையில், அரசாங்கத்தை முன்னோக்கி நகர்த்த முடியவில்லை. இதனால் ஏனைய துறைகளை போன்று இத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வாரத்தில் ஏனைய சங்கங்களுடன் பேச்சு நடத்தி தீர்மானத்தை நிறைவேற்றவுள்ளதாக கெமுனு விஜேரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில் நாளை 28ஆம் திகதி போக்குவரத்து துறையினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ள நிலையில், நாட்டில் பொதுப் போக்குவரத்து துறை முடங்கும் சாத்தியம் காணப்படுவதாக சமூக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

நாளை (28) நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் மரக்கறிகள் கையிருப்பு விநியோகிக்கப்பட மாட்டாது என அகில இலங்கை கூட்டு விசேட பொருளாதார மத்திய நிலைய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று (26) ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அதன் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிராக நாளை ஹர்த்தால் நடத்த அரச ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதால் நாளை கொழும்பு மெனிங் மார்க்கெட் உள்ளிட்ட பல பொருளாதார நிலையங்களில் இருந்து மரக்கறிகளை அனுப்ப வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கடனை மீளச் செலுத்த தவறும்...

2023ஆம் ஆண்டு முதல் 2028ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முதிர்ச்சியடையவுள்ள இறையாண்மை முறிகளுக்கான வட்டியை செலுத்துவதற்கு வழங்கப்பட்ட 30 நாள் கால அவகாசம் முடிவடைந்த பின்னரும் அதனை செலுத்தத்தவறினால் தரப்படுத்தலில் D மட்டம் வரை இலங்கை தரமிறக்கப்படலாம் என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

D மட்டம் என்பது கடனை செலுத்தத்தவறும் அபாயமுள்ள நாடு என்பதையே குறிக்கின்றது.

குறித்த காலப்பகுதிக்குள் இலங்கை அந்த வட்டியை செலுத்தும் என எதிர்பார்க்க முடியாது என Standard and poor's நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மைக்காலமாக முடீஸ், பிட்ச், Standard and poor's ஆகிய நிறுவனங்கள் தொடர்ச்சியாக கடன் தரப்படுத்தலில் இலங்கையை தரமிறக்கி வருகின்றன.

## அடுத்த சில மாதங்களில்...

அதன்படி, அடுத்த சில மாதங்களில் மக்களுக்கு நிதி அடிப்படையிலான மானியம் வழங்குவதற்கு முடியும் என எதிர்பார்க்கின்றோம் என அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது நாங்கள் அறிந்த விடயமாகும். கொரோனா தொற்றினால் விநியோகத்துறை வீழ்ச்சியடைந்ததால் ஏற்பட்ட பாதிப்புகள் இலங்கையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின.

2019ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்த போது உலக சந்தையில் எரிபொருள் பெரலின் விலை 62 டொலராக காணப்பட்டது. ஆனால், தற்போது அது இரு மடங்காகி 113 டொலராக காணப்படுகின்றது. அதேபோன்று, உரம் மற்றும் மாவின் விலையும் இரு மடங்காக அதிகரித்துள்ளது. இது நாட்டு மக்களுக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அதனை மக்களால் தாங்கிக் கொள்ளவும் முடியாது.

அரிசி, பழங்கள் மற்றும் மரக்கறி தவிர்ந்த ஏனைய அனைத்து பொருட்களும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதற்காக 22 பில்லியன் டொலர் ஒரு தவணைக்காக செலவழிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த பொருட்களின் விலை அதிகரிப்பு எங்களுடைய மக்களுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியது. குறிப்பாக, கொரோனாவிற்கு பின்னர் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், பாதிப்பை தாங்கிக்கொண்டு பல தடவைகள் மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா உள்ளிட்ட சில மானியத்தையும் நாங்கள் வழங்கினோம். எனினும், சில சில தவறான முடிவுகளால் பொருளாதாரம் மீண்டும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதுடன், இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்வதற்கான நிதி அமைச்சர் பெரும் முயற்சிகளை எடுத்து பல நாடுகள் மற்றும் பல தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார். அதன்படி, அடுத்த சில மாதங்களில் மக்களுக்கு நிதி அடிப்படையிலான மானியம் வழங்குவதற்கு முடியும் என எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

## இடைக்கால அரசு...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பலமிக்கதொரு அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியது. 150க்கு மேற்பட்ட ஆசனங்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு இருந்தது. இதில் 39 உறுப்பினர்கள் ஆளுந்தரப்பிலிருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக அமர்ந்தமையினால் அரசாங்கத்தின் பலம் கேள்விக்குறியானது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் உக்கிரமடைந்துள்ள அரசியல் நெருக்கடி பொருளாதாரத்திற்கு ஒருபோதும் சாதமாக அமையாது. அது பாதகமாகவே அமையும் என்பதை ஜனாதிபதி நன்றாகவே புரிந்துகொண்டுள்ளார். இதனால் ஜனாதிபதி, முதலில் அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கே முக்கியத்துவம் கொடுத்தார்.

அதற்கமைய, மறுசீரமைக்கப்பட்ட அமைச்சரவைக்கு முன்னிருந்த அமைச்சரவையில் பிரதமர் மற்றும் தற்காலி அமைச்சர்கள் நால்வரை தவிர ஏனைய அனைத்து அமைச்சர்களும் பதவி விலகி, இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானித்தனர். அதன்படி, நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளையும் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு பகிரங்க அழைப்பொன்றை விடுத்தார். எனினும், அதற்கு சாதகமான எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. அந்த அழைப்பை ஏற்றிருந்தால் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைத்திருக்க முடியும். ஆனால், அது நடக்கவில்லை.

இதனால், நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்காக சிரேஷ்ட அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகி, இளைய தலைமுறையினரிடம் அமைச்சு பதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தார். இது மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த நிலையில், அது தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனாலும், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டாலும் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதாக இருந்தாலும் ஜனாதிபதி மற்றொரு முடிவையும் எடுத்துள்ளார். அதன்படி, இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி தயாராக இருப்பதால் மகாநாயக்க தேரர்களிடம் தெரிவித்துள்ளார்.

எனவே, அவர் விடாப்பிடியாக இல்லை என்பதுடன், இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு அவர் இணக்கத்துடனே இருக்கின்றார். அது எவ்வாறு நடக்கும் என்பது எனக்கு தெரியவில்லை.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தை மாற்றுவதற்கு தயாராக இருந்தால் அதற்கு ஜனாதிபதி எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்க மாட்டார். மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைக்கு பொருளாதார நெருக்கடியே காரணம் என்பதால் அதனை கட்டியெழுப்புவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும் - என்றார்.

## வேலை நிறுத்தத்தில்...

நாளை 28ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ள ராஜபக்ஷ அரச எதிர்ப்பு கூட்டு தொழிற்சங்க வேலை நிறுத்தத்தில் மலையக தோட்டத்தொழிலாள உடன்பிறப்புகள் முழுமையாக கலந்துகொள்ள வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் ஆகியோர் கொழும்பிலும், பிரதி தலைவர் வே. இராதாகிருஷ்ணன் மலையகத்திலும் நடத்திய விசேட ஊடக சந்திப்புகளில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மனோ கணேசன் எம்.பி கூறியுள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அனைத்து ராஜபக்ஷ அரசியல்வாதிகளும் தத்தம் பதவிகளை இராஜினாமா செய்து விட்டு வீட்டுக்கு போக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, நாடு தழுவிய உழைக்கும் மக்கள் நடத்தும் போராட்டத்தில், மலைநாட்டு தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட உழைக்கும் மக்களும் கலந்துகொள்ள வேண்டும்.

வேறு எவரையும் விட எமக்கே இதற்கான முழு உரிமை இருக்கிறது. "கோட்டா கோ ஹோம்" என்று இன்று சொல்லப்பட்டாலும் நாம் அன்றே "கோட்டா டோன்ட் கம்" என்று சொன்னவர்கள். அதாவது, "கோட்டா வீட்டுக்கு போங்கள்" என்று இன்று சொல்லப்பட்டாலும், நாம் அன்றே "கோட்டா வர வேண்டாம்" என்று சொன்னவர்கள். ஆகவே இன்று முழு நாடும் எமது கோஷத்தையே எதிரொலிக்கின்றது.

எனவே நாளை 28ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள இந்த நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் முழு அளவில் கலந்துகொண்டு அமைதியாக எமது எதிர்ப்பை வெளிக்காட்டுமாறு தோட்டத்தொழிலாள உடன்பிறப்புகளை தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் அழைக்கின்றோம்.

# தேசிய சுதந்திர தின நிகழ்வுக்கு 9.5 கோடி ரூபா செலவு

## ஐந்து வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிக நிதி ஒதுக்கீடு; தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வெளியான விபரம்

(றிப்தி அலி)

நாடு பாரிய பொருளாதார நெருடிக்கடியினை எதிர்நோக்கியுள்ள நிலையில் கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி நடைபெற்ற 74ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்விற்கு 9 கோடி 47 இலட்சத்து 65 ஆயிரத்து 564 ரூபா 75 சதம் செலவளிக்கப்பட்டுள்ள விடயம் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வெளியாகியுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் நடைபெற்ற தேசிய சுதந்திர தின நிகழ்வுகளில் இந்த வருட நிகழ்விற்கே அதிக நிதி செலவளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தேசிய சுதந்திர தின நிகழ்விற்கான செலவு விபரம்**

| வருடம் | செலவு (ரூபா) |
|---|---|
| 2022 | 94,765,564.75 |
| 2021 | 80,662,000.36 |
| 2020 | 63,214,561.99 |
| 2019 | 68,130,091.15 |
| 2018 | 86,805,319.35 |



மிகப் பிரமாண்டமான முறையில் இந்த வருடம் நடத்தப்பட்ட தேசிய சுதந்திர தின நிகழ்வினை உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.

இதற்காக செலவளிக்கப்பட்ட நிதித் தொகை தொடர்பில் இராஜாங்க அமைச்சிற்கு கடந்த பெப்ரவரி 7ஆம் திகதி தகவலறியும் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் தகவல் அதிகாரியான நிர்வாகப் பிரிவிற்கு பொறுப்பான மேலதிக செயலாளர் பீ.எஸ்.பி. அபேயவர்த்தனவினால் கடந்த 20ஆம் திகதி வழங்கப்பட்ட பதிலிலேயே இந்த விடயம் தெரியவந்தது.

இதில் மேடை அமைத்தல், கொடிக் கம்பங்கள் விநியோகம் மற்றும் செங்கம்பளம் விநியோகத்துக்காக அரச தொழிற்சாலைகள் திணைக்களத்திற்கு 3 கோடியே 76 இலட்சத்து 29 ஆயிரத்து 900 ரூபாவும், கலாசார கண்காட்சி நடைபவனியை நடத்துவதற்காக புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சுக்கு 1 கோடியே 90 இலட்சத்து 6 ஆயிரத்து 640 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக நடமாடும் மலசலகூடத்திற்காக 1 கோடியே 52 இலட்சத்து 96 ஆயிரத்து 358 ரூபாவும், விருந்தோம்பலிற்காக 29 இலட்சத்து 36 ஆயிரத்து 321 ரூபா 70 சதமும், டிஜிட்டல் திரைக்காக 16 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் செலவளிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்தது.

அத்துடன், தேசிய சுதந்திர தின நிகழ்விற்கு தேவையான மின்சார வசதிக்காக 1 கோடி 11 இலட்சத்து 5 ஆயிரத்து 412 ரூபா 11 சதமும், நீர் வசதிக்காக 21 இலட்சத்து 64 ஆயிரத்து 594 ரூபா 64 சதமும் ஒலிபெருக்கி முறைமைகள் மற்றும் கதிரைகளுக்காக 25 இலட்சத்து 34 ஆயிரத்து 648 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் காலி முகத்திடலில்

சர்வதேச தொழிலாளர் தினத்தை இம்முறை கொழும்பு, காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியல் கட்சிகளை கட்டியெழுப்புவதற்கான தருணம் இதுவல்ல எனவும், தற்போது காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொதுவான போராட்டத்துடன் சகலரும் கைகோர்த்துக்கொள்ள வேண்டும்.

அதற்கமைய, ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் மே மாதம் முதலாம் திகதி காலி முகத்திடலில் இடம்பெற்றுவரும் போராட்டக்காரர்களுடன் இணைந்து மே தின நடவடிக்கைகள் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கோட்டா கோ கம இளைஞர்கள் போராட்டம் அரசியல் கட்சிகளுக்கான போராட்டம் இல்லை என்பதால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் இந்த போராட்டத்தில் பங்குபற்றப்போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் ஒன்றிய அங்கத்தவர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து நேற்று கலந்துரையாடல் நடத்தினர்.

# அலரிமாளிகைக்கு முன்னால் உருவானது 'மைனா கோ கம'







நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையின் காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டுமெனக்கோரி கொழும்பு காலி முகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் 'கோட்டா கோ கம' என்ற தொனிப் பொருளிலான தொடர் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகமான அலரி மாளிகைக்கு முன்னால் 'மைனா கோ கம' என்ற புதிய போராட்டமையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அலரிமாளிகைக்கு முன்னால் நேற்று முன்தினம் (25) தமது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கக்கோரி, சிலரால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவ்விடமும் புதிய போராட்ட மையமாக மாறியுள்ளது.

நேற்று (26) அவ்விடத்தில் கூடாரம் அமைக்கப்பட்டு மைனா கோ கம என்ற பதாதை வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் வெகுஜன பேரணி கண்டியிலிருந்து ஆரம்பம்









அடக்குமுறை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய சக்தியின் பாத யாத்திரை நேற்று (26) கண்டியில் ஆரம்பமானது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட இலட்சக்கணக்கான மக்கள் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்த பாத யாத்திரைக்கு சுமார் ஒரு மணித்தியாலம் முன்னதாகவே ஆயிரக்கணக்கான மக்கள் கண்டிக்கு வருகைதந்து கொண்டிருந்தனர். கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து தொகுதிகளையும் உள்ளடக்கியவாறு வருகைதந்த மக்களால் கண்டி நகரம் நிரம்பி வழிந்தது. கண்டி பொதுச்சந்தையிலிருந்து ஆரம்பமான பேரணி பிற்பகல் 2 மணியளவில் பேராதனையை வந்தடைந்தது.

பெருந்திரளான மக்கள் கூட்டம் வருகைதந்திருந்த காரணத்தால், பாத யாத்திரை வீதியின் இருபுறமும் இருந்த மக்கள், அணிவகுத்துச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பெரும் வரவேற்பளித்ததுடன், தொனிப்பொருளைக் கூறி ஆரவாரம் செய்ததையும் காண முடிந்தது.

கண்டி, பேராதனை, கிரிபத்கும்புர, பிலிமத்தலாவ மற்றும் கடுகன்னாவ ஊடாக மாவனெல்லையில் முதலாவது பாத யாத்திரையை நிறைவு செய்யும் ஐக்கிய பாத யாத்திரை இன்று (27) கலிகமுவ நோக்கி பயணிக்கவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளதோடு, சுதந்திரப் போராட்டம் என்ற தொனிப்பொருளில் மே முதலாம் திகதி நூற்றாண்டின் மே பேரணி நடைபெறவுள்ளது.








எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு, பொருட்களின் விலை அதிகரிப்பை கண்டித்து புத்தளம் நகரசபையின் உறுப்பினர்கள் மாட்டு வண்டிகளிலும் சைக்கிள்களிலும் சென்று சபை அமர்வில் நேற்று கலந்துகொண்டனர்.

# விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற லொறி சாரதி திருகோணமலையில் கைது





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - ரொட்டவெவ - மிரிஸ்வெவ பகுதியில் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற லொறியின் சாரதியை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் டி.சுபராஜினி முன்னிலையில் நேற்று (26) குறித்த சந்தேகநபரை ஆஜர்படுத்தியபோது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட லொறியின் சாரதி கிண்ணியா மணியரசன் குளம் பகுதியைச் சேர்ந்தவர் (36 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, கடந்த 18ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் ரொட்டவெவ பள்ளிவாயலுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை திருட்டுத்தனமாக கொண்டு செல்லும் வழியில் திருகோணமலையில் இருந்து ஹொரவப்பொத்தானை பகுதிக்கு மணல் ஏற்றிக்கொண்டு வந்த டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதேநேரம் குறித்த லொறியின் சாரதி விபத்து பற்றி தெரியப்படுத்தாமல் சென்ற நிலையில் மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலால் தலைமையில் சிசிடி கெமரா சோதனையிடப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இந்நிலையில் குறித்த சாரதி நேற்றிரவு கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் கலன்பிந்துனுவெவ - மெகொடவெவ - யகல்ல பகுதியைச் சேர்ந்த சஜித் லக்சான் ராஜபக்ஷ (19 வயது) இளைஞர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.



அமெரிக்க தூதுவர் ஜூலி சங், போர் காலத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை நேற்று (26) சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamileditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 27ஆம் திகதி, புதன்கிழமை

# கூட்டுப்பொறுப்பு அவசியம்

நாடு இக்கட்டான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், அரசியல் தளம்பல் காரணமாக மேலும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

அரசியல் ஸ்திரத்தன்மையை நாட்டு மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால், அதிகார ஆசை பிடித்த ஆட்சியாளர்கள் அதற்கான ஏற்பாடுகள் எனக்கூறி காலம் தாழ்த்தும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்ற சூழ்நிலையில், உள்நாட்டில் அரசியல் உறுதிப்பாடு அத்தியாவசியமானதாகக் கருதப்படுகிறது. ஏனென்றால், கடன் மீள்செலுத்துகை மற்றும் நாணய நிதியத்தால் முன்வைக்கப்படுகின்ற யோசனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் காத்திரமான உறுதிப்பாட்டை வழங்க வேண்டியுள்ளது.

அவ்வாறு இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற உறுதிப்பாட்டை சர்வதேச நாணய நிதியம் நம்புவதற்கு இலங்கையில் உறுதியான அரசு இருக்க வேண்டும்.

இலங்கை தனது கடன் நெருக்கடியை சமாளிக்க நாணயக் கொள்கையைக் கடுமையாக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வரியை உயர்த்த வேண்டும் எனவும், நெகிழ்வான மாற்று விகிதங்களை பின்பற்ற வேண்டும் எனவும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

22 மில்லியன் மக்களைக் கொண்ட நாடு, தீவிர கடன் சுமையில் சிக்கியுள்ளது. அத்துடன், உயர்ந்து வரும் பணவீக்கம் மற்றும் அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சிக்கு மத்தியில் இறக்குமதிகளுக்கு பணம் செலுத்தப் போராடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைக் கோரியுள்ளதென 'ரொய்டர்ஸ்' செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

"கடந்த வார இறுதியில் மற்றும் இரண்டு நாட்களுக்கு முன்பு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளுக்கான தயாரிப்புகள் குறித்து நாங்கள் மிகவும் நல்ல, பயனுள்ள, தொழில்நுட்ப விவாதங்களை நடத்தியுள்ளோம்" என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

முக்கியமான செலவுத்தேவைகளை நிவர்த்திசெய்வதற்கு வரி வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். பணவீக்கத்தை கட்டுக்குள் வைத்திருக்க நிதிக்கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் பட்டினியோடு காலம் கடத்தவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அநுராதபுரத்தில் தனது கைக்குழந்தையுடன் வீதிக்கு இறங்கிப் போராடிய பெண் கூறிய விடயத்தை இங்கே பதிவுசெய்கிறோம்.

"ஜனாதிபதியின் மனைவியும், பிரதமரின் மனைவியும் தாய்மார்தானே? தங்கள் பிள்ளைகள் பட்டினியில் இருப்பதை அவர்கள் தாங்கிக்கொள்வார்களா? இன்று பஸ்ஸுக்குக் கூட காசில்லாமல் நடந்துவந்து போராடுகிறேன். என்னைப்போன்ற எத்தனையோ தாய்மார் வலியில் துவண்டிருக்கிறார்கள்" எனக் கண்ணீருடன் அந்தத் தாய் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

மக்கள் இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலையை தொடரச்செய்யாமல் பொருளாதார நெருக்கடியை தவிர்ப்பதற்கு உடனடியாக அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.

அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன. எனினும், ஒருசில கட்சிகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. அதேபோன்று இடைக்கால அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மகாநாயக்க தேரர்களிடம் உறுதியளித்துள்ளார். ஆனபோதும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கப்படவில்லை.

இடைக்கால அரசாங்கத்துக்குத் தான் ஆதரவளிக்கப்போவதில்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உறுதிபட அறிவித்துள்ளார். நாடு நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ள நிலையில், அரசியல் இலாபங்களைத் தவிர்த்து நாட்டின் நன்மைக்காக தீர்க்கமான முடிவுகளை விட்டுக்கொடுப்புடன் எடுக்க வேண்டும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையை நாம் அனைவருமே எதிர்நோக்கியிருக்கிறோம். பசியும், பட்டினியும் ஆளுங்கட்சியினருக்கு மாத்திரமே என நினைத்துவிடக் கூடாது.

இந்த நிலைமைக்கு ஆளுந்தரப்பினர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனபோதிலும், நாட்டை ஒன்றிணைந்து கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயம் இப்போது உருவாகியுள்ளதை எதிர்த்தரப்பினர் உணர வேண்டும்.

அவ்வாறு கட்டியெழுப்புவதற்கான சூழலை உருவாக்க வேண்டியது அரச உயர்பீடத்தின் பொறுப்பாகும்.

அந்த தார்மீகத்தை உணர்ந்து நாட்டைக் காக்க மிகத் துரிதமான செயற்பாடுகளையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.




# அமைச்சரவை தீர்மானங்கள்

**2022.04.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:**

**01. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகால வதிவிட விசா வழங்குதல்**

இதற்கு முன்னர் நடைமுறைப்படுத் தப்பட்டு வந்த நீண்டகால வதிவிட விசா வழங்கும் பொறிமுறைக்குப் பதிலாக புதிய முறைமையொன்றுக்கு 2021 மார்ச் மாதம் 07 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. குறித்த பொறிமுறையின் கீழ் குறிப்பிட்ட நீண்டகால வதிவிட விசா வழங்குதல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கூட்டு ஆதனங்களின் பெறுமதி குறைந்தபட்சம் 75,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு மேலதிகமாக முதலீடு செய்கின்ற வெளிநாட்டவர்களுக்கும், வெளிநாட்டுக் கம்பனிகளின் இயக்குநர்களுக்கும், அவர்களுடைய துணைவருக்கும் தங்கி வாழ்பவர்களுக்கும் அவ்வாறு முதலிடுகின்ற அமெரிக்க டொலரின் அளவுக்கமைய 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான நீண்டகால வதிவிட விசா வழங்கல்.

இலங்கை மத்திய வங்கியால் அங்கீகாரமளிக்கப்பட்ட வணிக வங்கியொன்றில் குறைந்தது 100,000 அமெரிக்க டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கான வதிவிட விசா வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் "தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டம்" எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

**02. ஜப்பானின் யுரேஷியா மன்றத்தால் ஜெனரல் ஜோன் கொத்தலவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு ஆய்வுக்கான நிதி வழங்கல்**

"ஆசியாவின் கருத்தியலுக்கான கலாசாரத் தொடர்புகள்" எனும் தொனிப்பொருளின் கீழ் பாடநெறியொன்றை நடத்துவதற்காக ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு ஜப்பானின் யுரேஷியா மன்றம் ஆய்வுக்கான வழங்கலாக 42,000 அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த வழங்கல் மூலம் 200 மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்து அப்பாடநெறியை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்படும் வெளிநாட்டு செலாவணி மற்றும் எரிசக்தி விநியோகம் தொடர்பான நிதி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறையை நிறுவுதல்**

நாட்டில் நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணி நெருக்கடிகளுக்குத் தீர்வுகளாக ஒருசில நட்பு நாடுகள், சர்வதேச விநியோகஸ்தர்கள் மற்றும் உள்ளூர் தனியார் துறையினரால் பல்வேறு வகையான இருதரப்பு சலுகைக்கடன், எரிசக்தி விநியோகம் மற்றும் எரிசக்தித்துறை சார்ந்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற ஒருசில முன்மொழிவுகள், நாடு எதிர்கொண்டுள்ள வெளிநாட்டு செலாவணி நெருக்கடிகளுக்கு பயனுள்ள வகையிலான முன்மொழிவுகளாக அவதானிக்கப் பட்டாலும், அதுதொடர்பாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போது காணப்படுகின்ற பொறிமுறையில் திட்டவட்டமான வாய்ப்பில்லை. அதனால், குறித்த முன்மொழிவுகளில் சமகால முக்கியத்துவங்களைக் கருத்தில் கொண்டு அவற்றைப் பகுப்பாய்வு செய்து கடைப்பிடிக்க வேண்டிய பொறிமுறைகள் தொடர்பாக விதப்புரைகளை மேற்கொள்வதற்காக, பிரதமரின் செயலாளர் தலைமையில் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் நால்வரின் பங்கேற்புடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கு பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இருபத்தோராவது அரசியலமைப்புச் சட்டமூலத்தைத் தயாரித்தல்**

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியான உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அரசியலமைப்பிற்குப் பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்துவது உகந்ததென அரசியல், தொழில்வாண்மை மற்றும் சமூகப் பிரிவினர் வலியுறுத்துகின்றனர். அந்நிலைமையைக் கருத்தில் கொண்டு பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கமைய அமைச்சரவை கீழ்வரும் தீர்மானங்களை எட்டியுள்ளது:-

பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது அரசியலமைப்பு திருத்தங்களிலுள்ள சாதகமான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தி நாடாளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் கிட்டும் வகையில் இருபத்தோராவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான அடிப்படைச் சட்டமூலத்தை துரிதமாக தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்தல்.

மேற்குறிப்பிட்டவாறு தயாரிக்கப்படும் அடிப்படைச் சட்டமூலம் மற்றும் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்த யோசனைகள் தொடர்பாகக் கலந்துரையாடி பொது உடன்பாடுகளுடன் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றைச் சமர்ப்பிதற்கு பிரதமருக்கு அதிகாரமளித்தல்.

**05. 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மின்சார சட்டத் திருத்தத்தை அறிமுகப்படுத்தல்**

2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம் திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கையில் தங்கியிருக்கும் ரஷ்யா மற்றும் உக்ரேன் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டண அறவீடுகளின்றி விசாவுக்கான காலப்பகுதியை நீடித்தல்**

ரஷ்யா மற்றும் உக்ரேன் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளால் இலங்கையில் தங்கியிருக்கும் ரஷ்யா மற்றும் உக்ரேன் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டண அறவீடுகளின்றி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றுலா விசா அனுமதியை இரண்டு (02) மாதங்களுக்கு நீடிப்பதற்காக 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான நெருக்கடிகள் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பாதமையால், இலங்கையில் தங்கியிருக்கும் ரஷ்யா மற்றும் உக்ரேன் நாட்டவர்கள் எமது நாட்டில் தொடர்ந்து தங்கியிருக்கக் கூடிய வகையில் அவர்களுடைய விசாவுக்கான காலப்பகுதியை நீடிப்பதற் காக சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

நாட்டிலுள்ள சகலவிதமான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் எரிபொருள் அத்தியாவசியமாகையால், பொருளாதார செயன்முறையில் தெரிவுசெய்யப்பட்ட விசேடமான துறைகளில் தமக்குத் தேவையான எரிபொருட்களை தனித்தனியாக இறக்குமதி செய்து பயன்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவது உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதிக்காக முறையான வகையில் அடையாளம் காணப்படும் தரப்பினருக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில், 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. நிலவுகின்ற அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாகவுள்ள நெருக்கடியான நிலைமைகள் பற்றிய உண்மை நிலைவரங்கள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டல்**

தற்போது நாட்டில் உருவாகியுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாகவுள்ள நெருக்கடியான நிலைமைகள் பற்றிய உண்மை நிலைவரங்கள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டுவதற்காக ஏற்புடைய அமைச்சுகளின் பங்கேற்புடன் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மூலம் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- ★ 1521 – நாடுகாண் பயணி பெர்டினண்ட் மகலன் பிலிப்பைன்ஸ் பழங்குடியினரால் கொல்லப்பட்டார்.
- ★ 1906 – ரஷ்யப் பேரரசின் சட்டமன்றம் (தூமா) முதல் தடவையாகக் கூடியது.
- ★ 1992 – ரஷ்யா மற்றும் 12 முன்னாள் சோவியத் குடியரசுகள் அனைத்துலக நாணய நிதியம் மற்றும் உலக வங்கியில் உறுப்பு நாடுகளாக இணைந்தன.
- ★ 1993 – காபோனில் லிப்ரவில் அருகே இடம்பெற்ற விமான விபத்தில் ஸாம்பியாவின் தேசிய உதைபந்தாட்ட அணியினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.
- ★ 1994 – தென்னாபிரிக்காவில் முதல் தடவையாக கறுப்பினத்தவரும் வாக்களித்த மக்களாட்சி முறையிலான தேர்தல் இடம்பெற்றது.

# அலி சப்ரியை கட்சியிலிருந்து நீக்குமாறு புத்தளம் பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை

## மக்கள் காங்கிரஸ் நடவடிக்கை எடுக்காவிடின் இராஜினாமா செய்வதாகவும் எச்சரிக்கை



புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம், கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதினால் அவரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்திய அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட பிரதேச சபை உறுப்பினர்கள், இது தொடர்பில் கட்சியின் உயர்பீடம் துரிதமாக செயற்படாதவிடத்து, தாங்கள் வகிக்கும் பிரதேச சபையின் பதவிகளை இராஜினாமா செய்ய நேரிடும் என தெரிவித்துள்ளனர்.

மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட கட்சியின் உயர்பீடத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்பு, கட்சியின் நகர அமைப்பாளர் எம்.எச்.முஹம்மத் தலைமையில், நேற்று முன்தினம் (25) புத்தளத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட புத்தளம், கல்பிட்டி, வண்ணாத்தவில்லு பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் கூட்டாக இந்த வேண்டுகோளினை முன்வைத்தனர்.

கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்களான முஹம்மத் ஆசிக், பைசல் மரைக்கார், புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் றிபாஸ் நசீர், வண்ணாத்தவில்லு பிரதேச சபை உறுப்பினர் எம்.அனஸ்தீன் மற்றும் புத்தளம் வட்டாரங்களின் அமைப்பாளர்களும் இந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துரைத்த புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் முஹம்மத் றிபாஸ் நசீர்,

"தலைமைத்துவம் தொடர்ந்தேர்ச்சையாக, கட்சி கட்டுப்பாட்டினை மீறுபவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதினால்தான் அவர்கள் பதவிக்கு வந்ததும், துரோகங்களை இழைக்கின்றனர். இதனால் தலைமைத்துவம் மட்டுமல்ல, வாக்களித்த மக்களும் ஏமாற்றத்தை சந்திக்க நேரிடுகின்றது. இந்த நிலை தொடருமாயின் கட்சியின் கட்டுக்கோப்பு சீர்குலைந்து போய்விடும்.

ஒரு மக்கள் இயக்கத்தினை உருவாக்குவதற்கு போராளிகள் செய்யும் தியாகங்கள் அளப்பறியது. அந்தவகையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினை உருவாக்க தலைவர் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்ட சிலர் செய்த தியாகங்களை, நேற்று கட்சிக்குள் வந்த வியாபாரிகள் இல்லாமல் ஆக்கி செல்வதுடன், கட்சியின் மீதும், தலைமைத்துவத்தின் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையினை சீர்குலைக்கின்றனர்.

இனி மேலும் இதற்கு இடங்கொடுக்க முடியாது. சில தீர்மானங்களை தலைமைத்துவமும், உயர் சபையும் துணிச்சலுடன் எடுப்பதன் மூலமே இவ்வாறு அடையாளம் காட்டப்படும் நபர்களை சமூகம் துடைத்தெறியும்" என்று கூறினார்.

கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் பைசல் மரைக்கார் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த தேர்தலின் போதே மேற்படி நபருடைய செயற்பாடுகள் தொடர்பில் தலைமைக்கு எடுத்துரைத்தோம். அபிவிருத்தி என்ற போர்வையில், தமது சொந்த இலாபங்களுக்காக ஆளுங்கட்சிக்கு முட்டுக் கொடுத்துவிட்டு, வாக்களித்த எமது மக்களின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தாமல், தமது தேவைகளை நிறைவேற்றும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவே அலி சப்ரி றஹீமை பார்க்கின்றோம்.

எனவே, கட்சியின் தலைமை உடனடியாக இவரை கட்சி உறுப்புரிமையிலிருந்து விலக்க வேண்டும். கட்சிக்கும், சமூகத்திற்கும், வாக்களித்த மக்களுக்கும் இப்படிப்பட்ட துரோகத்தனத்தினை செய்தவர்களால், கட்சிக்கு அவப் பெயரே ஏற்படும் என்பதை தலைமைக்கு வலியுறுத்துகிறோம்" என்று கூறினார்.

கல்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் முஹம்மத் ஆசிக் ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

"தலைவர் ரிஷாட் பதியுதீன் அமைச்சராக இருந்த போது, தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அமைப்பாளராக இருந்தார். அப்போது, முழுமையான அபிவிருத்திகளை தலைவரே செய்தார். அப்போது அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நல்லவர். இப்போது கூடாதவர் என்று கூறுகின்றார். இப்போது ரிஷாட் பதியுதீன் புளிக்கின்றதா? எனக் கேட்கின்றேன்.

மொட்டுக்கு முட்டுக்கொடுத்து, ஆட்சியாளர்களின் அபிவிருத்திகளை மக்களுக்கு என்று சொல்லி தனிப்பட்ட பல விடயங்களை சாதித்துள்ளதை நாமும், மக்களும் அறியாதவர்கள் அல்ல.

நாட்டில் பொருளாதார வீழ்ச்சி மற்றும் உணவுத் தட்டுப்பாடுகள் அதிகரித்து காணப்படும் இந்த வேளையில், மக்களின்பால் நின்று அவர்களுக்காக பேசாமல், அமைச்சுப் பதவிக்காக காட்டிக் கொடுக்கும் அநியாயத்தை செய்து, அமைச்சுப் பதவியினை பெற்றுக்கொண்டு வந்தால் புத்தளம் மக்கள் மலர் மாலையா அணிவிக்கப் போகின்றார்கள்? என கேள்வி எழுப்பிய உறுப்பினர் முஹம்மத் ஆசிக், மக்கள் கடும் சினத்துடன் இருப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில், நகர சபை முன்னாள் வேட்பாளர் எம்.முர்சிட்டும் பங்குபற்றினார்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA | 26.04.2022 நாணய மாற்று வீதம் | |
| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
| அவுஸ்திரேலியன் டொலர் | 13 1 61 | 140 1207 |
| கனேடியன் டொலர் | 152 1 48 | 163 626 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 184 | 42 1602 |
| யூரோ | 251 8317 | 263 8104 |
| ஜப்பான் யென் | 1 5235 | 1 6282 |
| சிங்கப்பூர் டொலர் | 134 2522 | 143 0164 |
| ஸ்ரேலிங் பவுன் | 317 4752 | 334 7022 |
| சுவிஸ் பிரான்ங் | 24 37 6 | 253 662 |
| ஐ.அ.டொலர் | 222 7764 | 235 3845 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 8 2 53 |
| குவைட் | குவைட் தினார் | 0,002 6115 |
| ஓமான் | ஓமான் றியால் | 773 2021 |
| கட்டார் | கட்டார் றியால் | 82 0827 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 8 6578 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81 5816 |



உற்சவ நிகழ்வு ஏற்பாட்டாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், உணவு விநியோகத்தர்கள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக கண்டியில் நேற்று (26) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(படப்பிடிப்பு: கமல் சுரவீர)

# சிலாபத்தில் பல்வேறு இடங்களில் தேவாலயங்களை உடைத்து கொள்ளை

## திருச்சொரூபங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தகவல்



(ஜூட் சமந்த)

சிலாபம், மாரவில மற்றும் ஆராச்சிக்கட்டுவ ஆகிய பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக, சில கத்தோலிக்க தேவாலயங்களிலுள்ள உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் திருடியமை மற்றும் சிலைகளை உடைத்து சேதப்படுத்திய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மாரவில், கானிக்க தேவமாதா தேவாலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதாக மாரவில பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி பங்கதெனிய சந்தியில் அமைக்கப்பட்டுள்ள தேவமாதா சிலைக்கு அருகிலிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸாரிடம் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதேவேளை, சிலாபத்துக்கு அருகிலுள்ள தேவாலயத்தில் நுழைந்த நபரொருவர் அந்த தேவாலயத்திலிருந்த உண்டியலை உடைத்து அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. கடந்த 10, 11 மற்றும் 12ஆம் திகதிகளில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பங்கதெனிய, கருக்குபனை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஜோசப் வாஸின் சிலை கடந்த 17ஆம் திகதி இரவு இனந்தெரியாத நபர்களினால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடொன்று ஆராச்சிக்கட்டுவ பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

இதேவேளை, கட்டுநேரிய புனித செபஸ்டியன் தேவாலயத்தில் பொறுத்தப்பட்டிருந்த உண்டியல் கடந்த 24ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டது தொடர்பான முறைப்பாடொன்று மாரவில பொலிஸ்நிலையத்தில் பதிவாகியுள்ளது.

இவ்வாறு உண்டியல்கள் உடைக்கப்பட்டு திருடப்பட்ட நிதித் தொகை இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நிதி திருட்டு மற்றும் சிலைகளை சேதப்படுத்திய சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

சிலாபம், மாரவில மற்றும் ஆராச்சிக்கட்டு பொலிஸார் இந்த சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மக்களின் குரலை ஒருபோதும் காட்டிக்கொடுக்கப் போவதில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



காலி முகத்திடல் மாத்திரமின்றி நாட்டின் எந்த இடத்திலும் இந்த அடாவடித்தனமான அரசாங்கத்தை முதலில் வீட்டுக்கு அனுப்புமாறே மக்கள் கோருகின்றனர். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயற்படும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்களால் பாதிக்கப்பட் டோர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் (25) இந்த மாநாடு இடம்பெற்றது.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடு கையில்,

மக்களின் குரல் மற்றும் மக்களின் கோரிக் கைகளுக்கு அப்பால் தாம் எதனையும் செய்யப் போவதில்லை. ஜனாதிபதியையோ அல்லது ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த யாருடனும் இணைந்து ஆட்சியமைக்குமாறு மக்கள் கோர வில்லை.

மொட்டுடன் ஆட்சியமைத்து கொள்ளை யர்களை பிடிக்க முடியாது எனவும் அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்குமாறும் மக்கள் கோரவில்லை.

அன்று நாட்டை ஒப்படைக்கும்போது, 7 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கையிருப்பு இருந்தது. ஆனால், இன்று அரசாங்கம் உலகம் பூராகவும் பிச்சை எடுக்கச் செல்கிறது என்றார்.

# உடப்பூரில் சித்திரைச்செவ்வாய் முளைக்கொட்டு

புத்தளம் மாவட்டத்திலே பரந்துவாழும் மக்களில் தமிழ் மக்களும் ஒருகுடியினர். அந்த வகையில் தமிழ் மக்கள் கூட்டாக செறிந்து வாழும் தமிழ் கிராமம் உடப்பூராகும்.

இந்தக் கிராமத்தில் ஜீவனோபாய தொழிலாக கடற்றொழில் இருந்தாலும் இவர்கள் கலை, கலாசாரத்தை கண்ணியமாக மதித்துவந்ததை இன்றும் பலகலை நிகழ்ச்சியின் மூலம் காணக்கூடியதாக உள்ளது.

அந்தவகையில் உடப்பு கிராமத்தில் 'சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு' வம்சாவழியாக தொன்று தொட்டு நடைபெற்றுவருகின்றது. இந்நிகழ்ச்சி ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முளைப்பதித்தல் மூலம் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வு இன்று புதன்கிழமை காலை வேளையில் இடம்பெறும்.

உடப்பில் மாரியம்மன் வழிபாட்டின் மற்றொரு அம்சமாகச் சித்திரைமாதத்தில் திறந்த வெளிவீடுகளின் வளவுகளில் நடத்தப்படும் சித்திரைச் செவ்வாய் விழாவைக் குறிப்பிடலாம்.

அக்கினி நட்சத்திரம் என மக்கள் குமுறுகின்றகாலம் இது. அக்கினி நட்சத்திரம் என்பது சித்திரைமாதம் அவிட்ட நட்சத்திரத்தில் இருந்து விசாக நட்சத்திரம் வரை 21 நாட்களைக் குறிக்கும்.

இக்காலப்பகுதி மிகவும் வெப்பமானது. இந்தக் காலத்திலேயே தமிழ்நாட்டில் மாரியம்மன் கோவில்களில் விழாக்கள் இடம்பெறும். மழை வரவிருப்பதையே இவ்வழிபாடு உணர்த்தும். அங்கு கோயில் திருவிழா தொடங்கிவிட்டதை அறிவிக்க கொடி ஏற்றப்படும். அன்று முளைப்பாரி கொட்டுதல் என்ற ஒருநிகழ்ச்சி உண்டு. கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் குறிப்பிட்ட





ஓரிடத்தில் ஒருகுடத்தில் நெல் தானியங்கள், பயறு வகைகள் ஆகியவற்றை விதைப்பார்கள். எட்டாம் நாள் அந்தக் குடங்களை கோயிலுக்குக் கொண்டுவருவார்கள். அந்த மூன்று நாட்களும் பெண்கள் பலர் சேர்ந்து மாரியம்மன் புகழைக் கும்மியடித்து பாடுவார்கள். பிறகு வணக்க ஒடுக்கமாக பானைகளை வலம் வருவர். திருவிழாவின் இறுதியில் அருகேயுள்ள குளம் அல்லது ஆற்றில் பானைகளை மூழ்கடித்துவிடுவர். இந்தக் கூற்றுகளிலிருந்து தமிழ்நாட்டு வழிபாட்டுச் சடங்குகளின் ஒரு கூறு சிற்சில மாறுதல்களுடன் சித்திரைச் செவ்வாய் விழாவாகப் பின்பற்றப்பட்டு வருவது புலப்படுகின்றது.

இச்சடங்கு நிகழ்ச்சி வழிபாடு தொடர்பானதாக இருக்கின்றமையால் அவ்வேளையில் பாடப்படும் பாடல்களும் வழிபாடு தொடர்புடையனவாக அமைகின்றன. இச்சடங்கின் போது கும்மி ஆட்டத்துடன் பாடலும் இடம்பெறுகின்றது.

இச்சடங்கு நிகழ்ச்சியின்போது நவதானியங்கள் முளைக்கவைத்தல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது. முளைக்க வைக்கத் தேவையான நவதானியங்களை வீடுவீடாகச் சென்றுபெற்றுக் கொண்டனர். அவ்வாறு நவதானியங்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய பாடலைப் பாடினர்.

கன்னிப்பெண்கள் வீடுவீடாகச் செல்லும் போது இவ்வாறு பாடுவர். "கடலை சிறுபயறு கானாமணிப்பயறு தங்க முத்து நாச்சியார்க்கு எங்கும் சிறுபயறு'' மாரியம்மனுக்காக கொண்டாடப்படும் இச்சடங்கில் நவதானியங்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படும்.

குறிப்பிட்ட பத்து தினங்களில் நவதானியங்கள் நன்கு வளர்ச்சியடைந்திருப்பின் அம்மன் அருள் பாலித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. நவதானியங்களுக்காக கடலை பயறு கானா எள்ளு கொள்ளு இறுங்குநெல் குரக்கன் தினை போன்றவற்றை தெரிவுசெய்வர்.

நவதானியங்களை பாலிகைச்சட்டியில் உரமிட்டு சாணம் நிரப்பி பதித்து தூப தீபம் காட்டி காலையும் மாலையும் நீர் ஊற்றுவார்கள். இவற்றுக்கு பத்து வயதுக்குட்பட்ட கன்னிப்பெண்கள் நீர் ஊற்றி பக்குவமாக வளர்ப்பார்கள்.

இறுதி நாளுக்கு முந்திய செவ்வாய்க்கிழமை இரவு மாரியம்மனுக்கு வேப்பிலை கும்பம் வைத்து அதற்குரிய பலகாரம், கனிகள் வைத்து அன்று இரவு தொடங்கிவிடியும் வரைஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் கும்மிகொட்டி கொண்டாடுவார்கள். இதனை செவ்வாய்க் கொட்டுதல் என்று அழைப்பார்கள். இறுதிநாள் புதன்கிழமை காலை கொழுக்கட்டை கனி பொங்கல் ஆகிய நெய்வேத்தியங்களை படையல் செய்து பூஜை வைத்து வழிபடுவார்கள்.

அத்துடன் தேர் வடிவத்தில் அழகான பெட்டிசெய்து பல வர்ண நிற ஓலைகளால் அலங்கரித்து அதற்குள் செவ்வாய் என்னும் பலகாரம் வைத்து அத்துடன் சோறு, பொரியல் வைத்து படையல் வைப்பார்கள். செவ்வாய் இரவுவைத்த இந்த படையல்கள் புதன்கிழமை காலையில் எடுத்து வீடுகளுக்கு கொண்டுபோய் உண்பார்கள். செவ்வாய்க்கிழமை, புதன்கிழமைகளில் சித்திரைச் செவ்வாய் கொட்டும்போது. "ஓராம் நாள் முளை எழுந்து ஓங்கி வளருமாம் மாரி முளைஈராம் நாள் முளை எழுந்து இரட்டனம் கொட்டுமாம் மாரிமுளை'' என்று தொடங்கும் பாடலானது குறிப்பிட்ட பத்து நாட்களுக்குள்ளும் முளைக்க வைத்த நவதானியங்களின் வளர்ச்சிபற்றி கூறுவதாக அமைகின்றது.

சித்திரை மாதம் வெப்பம் நிறைந்த காலப்பகுதியாகும். இக்கால கட்டத்தில் அம்மை நோய் கூடுதலாக வருவதுண்டு. இந்நோயை இல்லாது செய்வதற்கு மாரியம்மனுக்கு செய்யும் ஒருநேர்த்தியாகவும் இதை உடப்புக் கிராமமக்கள் கருதுகின்றனர் எனலாம்.

இந்த நிகழ்வானது, இக்காலகட்டத்தில் பெண் கள் ஒரே வர்ண சேலை அணிந்து வரிசையாக வலம் வந்து இரு கைகளாலும் ஓசை உண்டாக்க செவ் வாய்க் கொட்டுவார்கள். இந்தக் கண்கொள்ளாக் காட்சி எமது கிராமத்தில் மட்டும் பார்ப்பவரை மிகவும் கவரும் வண்ணம் நடைபெறுகின்றது எனலாம். இந்தச் சித்திரைச் செவ்வாய் சடங்கு நிகழ்ச்சி இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் இருப்பதாக அறியமுடியவில்லை. ஆனால் இதனு டன் தொடர்புடையதாக இந்தியாவில் இராமநாதபுர மாவட்டத்தில் நடைபெறும் முளைப்பாரி சடங்கு நிகழ்ச்சி காணப்படுவதாக அறியமுடிகின்றது.

(கலைச்சுடர் க.மகாதேவன்-உடப்பூர்)

# மாத்தளை மாவட்ட பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் பசளை இன்மையால் பாதிப்பு: உற்பத்தியை கைவிடவும் தீர்மானம்

(மாத்தளை நிருபர்)

எரிபொருள், பசளை, கிருமிநாசினி மற்றும் வெங்காய விதைகள் இன்மையால் தங்களது உற்பத்திச் செலவுகள் அதிகரித்து வருவதால் மாத்தளை மாவட்ட பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திச் செய்கையை கைவிட தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தமிழ், சிங்களப் புத்தாண்டு முடிவுற்றதை தொடர்ந்து பெரிய வெங்காய உற்பத்திக்காக விவசாயிகள் தமது வயல் நிலங்களை தயார்செய்து ஆரம்பித்தபோது இதுவரை இப்பிரதேசத்தில் பெரிய வெங்காய உற்பத்தியை மேற்கொள்ள அரசினால் எந்தவிதத் திட்டமும் செயற்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது.

பெரிய வெங்காய உற்பத்தியை உரிய காலத்தில் மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் அறுவடையை மேற்கொள்வதே தங்களது இலக்காகும் எனக்கூறும் விவசாயிகள், காலந்தாழ்த்தி வெங்காய உற்பத்தியை மேற்கொள்வதால் விவசாயிகளான தங்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை எனவும் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை, சீகிரிய, கலேவெல, நாவுல, லக்கல, பல்லேகம, கெக்கிராவ, அநுராதபுரம், கலன்மிதுனுவெவ, கல்கிரியா கம, புப்போகம, கலாவெவ, ஹிங்குராங்கொட, பகமூன, தியபெதும போன்ற பகுதிகளிலேயே அதிகமான பெரிய வெங்காய உற்பத்தி இடம்பெறுகின்றது.

தம்புள்ளை கமத்தொழில் விவசாயத் திணைக்கள பிரதேசத்தில் வேவல பகுதியில் பெரிய வெங்காய உற்பத்தி அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் தற்போது இப்பகுதியிலும்கூட தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு பின்னர் பெரிய வெங்காய உற்பத்திக்கான ஆயத்தங்கள் காணப்படவில்லை.

எனவே, பெரிய வெங்காய உற்பத்தி மேற்கொள்ளப்படவேண்டுமானால் வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள மாபியாக்களினால் பதுக்கிவைக்கப்பட்டுள்ள பசளை உட்பட ஏனைய விவசாயப் பொருட்களை சரளமாக விவசாயிகளின் கைகளுக்கு கிடைக்க அரசு வழிவகுக்க வேண்டும் என உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.




நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும், ஜனாதிபதி மற்றும் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் மக்களினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்குமாறும், மக்களின் இறையாண்மைக்கு தலைவணங்கக் கோரியும் பதுளை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினரால் பதுளையில் நேற்று (26) ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. (எம்.செல்வராஜா, நடராஜா மலர்வேந்தன்)

# என்னை வசைபாடும் மக்கள் காலப்போக்கில் எனது நிலைப்பாடு சரியானதென உணர்வர்

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்



(பதுளை நிருபர்)

மலையக மக்கள் 15 இலட்சம் பேரையும் ஆளுங்கட்சி சார்பில் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தான் மட்டுமே இருந்து வருவதாகவும் தன் மீது மக்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வசைப்பாடுகின்றனர். ஆனாலும், காலப்போக்கில் எனது நிலைப்பாடு மிகச் சரியானதென அவர்கள் புரிந்துகொண்டு, என்னை பாராட்டுவார்கள் என்று தோட்ட வீடமைப்பு, சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.மேற்படி அமைச்சில் சமய வழிபாடுகளுடன் அண்மையில் தனது அமைச்சுப் பொறுப்புகளை பொறுப்பேற்ற அவர், அங்கு உரையாற்றுகையில்,

15 இலட்சம் மலையக மக்களின் அபிலாஷைகளை, தேவைகளை, விருப்புகளை இயன்ற வரையில் நிறைவேற்றுவதற்கு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

முழு மலையகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மலையக மக்களுக்கான அமைச்சுகளை என்னிடத்தில் ஒப்படைத்துள்ளார். பெரும் நம்பிக்கையின் மத்தியில் அமைச்சு பொறுப்புகளை வழங்கியுள்ள ஜனாதிபதிக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாடு இன்று பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியிருக்கின்றது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இளையவர்கள் மற்றும் பெரியவர்கள் என சகலரும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இவ்வார்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

அதனை நான் மதிக்கின்றேன். ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களென்று ஒரு புறமிருக்க, நாட்டை வழி நடத்திச் செல்லவேண்டிய பாரிய பொறுப்புகளும் இருந்து வரவே செய்கின்றன.

அதற்கமைவாகவே ஜனாதிபதி எனக்கு இப்பதவியை வழங்கியிருக்கின்றார். 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனது தலைவரான அமரர் சந்திரசேகரன், கண்ட கனவை நனவாக்கும் பொருட்டு அவரால் ஆரம்பித்துவைக்கப்பட்டதே தோட்ட வீடமைப்பு அமைச்சாகும்.

ஆகையால், அந்த அமைச்சில் கடமையாற்றியவன் என்ற வகையில், இவ்வமைச்சு தொடர்பான பூரண அனுபவங்கள் எனக்கு இருக்கவே செய்கின்றன. ஆகையால், இவ்வமைச்சை கொண்டு நடத்துவதென்பது எனக்கு இலகுவானதே.

ஆகவே, இந்திய அரசின் உதவிகளை பெற்று, எனக்கு வழங்கப்பட்ட அமைச்சுகளின் கடப்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென நான் எதிர்பார்க்கின்றேன். எனது இவ்வெதிர்பார்ப்புகளுக்கு அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் முழுமை யான ஒத்துழைப்பு களையும், பங்களிப்புகளையும் வழங்கவே செய்வர் - என்றார்.

# உக்குவளை பிரதேசத்தில் டெங்கு பரவும் அபாயம்

(உக்குவளை நிருபர்)

நாட்டின் பல பாகங்களிலும் தற்போது மழை பெய்துவருவதால் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக உக்குவளை பிரதேச சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆகவே பிரதேச மக்கள் வீடுகளையும் சுற்றுச்சூழலையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இதனையடுத்து டெங்கு கண்டறியும் அதிகாரிகள் பிரதேசமெங்குமுள்ள வீடுகள்தோறும் சென்று அங்குள்ள குடியிருப்பாளர்களை டெங்கு பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அறிவுறுத்தி வருவதுடன், டெங்கு பரவும் இடங்களை இனங் காண்பதுடன் தண்ணீர் தேங்கக்கூடிய பழைய குவளைகள், பாத்திரங்கள் போன்றவற்றை அப்புறப்படுத்தி அவற்றைப் புதைத்து விடுமாறும் அறிவுறுத்திவருகின்றனர்.

அவ்வாறிருக்க, யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்புகளும் வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும் நுளம்புவகைகளும் பரவும் அறிகுறிகளும் தென்படுவதாக தெரிவிக்கும் அதிகாரிகள் இதுவிடயத்தில் அவதானம் செலுத்துவதுடன் கட்டாயமாக சுகாதார பழக்க வழக்கங்களை மக்கள் பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டதுடன், மேற்படி நோய்களுக்கான அறிகுறிகள் ஏதும் தென்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

# கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் இலவச மருத்துவ முகாம்






(தலவாக்கலை நிருபர்)

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு நுவரெலியா மனித வள நிதியம், நுவரெலியா பிரதேச செயலகம் மற்றும் கிறேட்வெஸ்டன் தோட்ட நிர்வாகம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இலவச மருத்துவ முகாம் நேற்று (26) கிறேட்வெஸ்டன் பாடசாலையில் இடம்பெற்றது.

குறித்த மருத்துவ முகாமில் பாடசாலை மாணவர்களும் நூற்றுக்கும் அதிகமான கிறேட்வெஸ்டன் தோட்ட பொதுமக்களும் கலந்துகொண்டனர். இதன் ஆரம்ப நிகழ்வில் கிறேட்வெஸ்டன் தோட்ட வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

அதனைத்தொடர்ந்து மருத்துவ முகாம் இடம்பெற்றது. இதன்போது தோட்ட அதிகாரி சரத் ரணவீர, உதவி அதிகாரி தினேஸ் மெதவெக்க, மனித வள நிதியத்தின் பிராந்திய பணிப்பாளர் கே.ஏ.குலநாயக்க, நுவரெலியா பிரதேச உதவிச் செயலாளர் பிரதீபிக்கா விஜயசூரிய மற்றும் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ரெயிஸ்னி, கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி சுதர்சன், கிறேட்வெஸ்டன் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள், நுவரெலியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



கண்டி மாவட்டத்தின் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் அங்கத்தவர்கள் நியமனம் கடந்த சனிக்கிழமை ஈடன் பாக் மண்டபத்தில் நடைபெற்றது. மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.நசார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கண்டி மாவட்டத்திலிருந்து 15 பேர் அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்ட அதேவேளை, கம்பளை ஊடகவியலாளர் எஸ்.லோகேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கம்பளை யோகா)

# உலப்பனையில் வாகன விற்பனை உரிமையாளர் தாக்கப்பட்டு உரிமைச் சான்றிதழ் கொள்ளை

(கண்டி நிருபர்)

நாவலப்பிட்டி, உலப்பனை பிரதேச வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டு அவரிடமிருந்த வாகன விற்பனை உரிமைச் சான்றிதழ் கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் (25) கம்பளையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி வாகன விற்பனை வர்த்தகரிடம் வாகனம் ஒன்று கொள்வனவுசெய்வது தொடர்பாக ஏழுபேர் கொண்ட குழு ஒன்று கடந்த 24ஆம் திகதி இரவு அவரை அழைத்துச் சென்றுள்ளது.

வியாபாரியுடன் மற்றும் இருவர் உடன் சென்றுள்ளனர். கம்பளை தொலுவ பாதையில் வைத்து அவர்கள் தாக்கப்பட்டு வியாபாரியிடம் இருந்த வாகன விற்பனை உரிமைச்சான்றிதழ் (புத்தகம்) பறித்தெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கம்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.






நாட்டின் பொருளாதார நிலைமையை கண்டித்தும் ஆட்சியாளர்கள் பதவி விலகக் கோரியும் இலங்கையின் பரந்துபட்ட வெகுஜன இயக்கத்தினரால் நேற்று (26) கண்டியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (கண்டி அ.இராமன், ஜே.எம்.ஹாபிஸ்)

# தேயிலை விலையில் சாதனை




(தலவாக்கலை நிருபர்)

உயர்தர தேயிலைகளை உற்பத்திசெய்வதில் பெயர்பெற்ற ஹேலீஸ் பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் ஏப்ரலில் இடம்பெற்ற 2022ஆம் ஆண்டுக்கான ஏலத்தில் டஸ்ட் இலக்கம் 1 தர தேயிலைத் தூள் ஆயிரத்து 550 ரூபா விலையைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இந்த தேயிலை எம்.எஸ்.இம்பெரியல், எம்.எஸ்.போப்ஸ் மற்றும் வோக்கர் ஆகிய தனியார் ஏற்றுமதி நிறுவனங்களால் வாங்கப்பட்டது. கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் மிகவும் தரமான தேயிலைத் தூள் வகைகளான டீபியோபி, பியோபிஎவ், பியோபிஎவ்எஸ்பி மற்றும் டஸ்ட் இலக்கம் 1 ஆகியன சிறந்த விலைகளைப் பெற்றுள்ளன. தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டம், தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. இதன் வளர்ச்சிக்கு காரணமாக அதன் முகாமையாளர் சரத் ரணவீர விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# கணவன் திருடிய பொருட்களை உடைமையில் வைத்திருந்த மனைவி பொலிஸாரால் கைது

(கண்டி நிருபர்)

தெல்தெனிய பொலிஸ் பிரிவிலுள்ள திகன பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து மடிக்கணினி ஒன்றையும் இதர பொருட்கள் சிலவற்றையும் திருடிய சந்தேக நபரின் மனைவி நேற்று முன்தினம்(25) பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த வாரம் திகன பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் பூட்டு உடைக்கப்பட்டு அதிலிருந்த மடிக்கணினி மற்றும் விலங்குகளுக்கு வழங்கப்படும் மருந்துப் புட்டிகள் என்பன திருடப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி சுமார் 70 ஆயிரம் ரூபா எனத் தெரிய வருகிறது. இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் மேற்படி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், சந்தேக நபர் தலைமறைவாகி விட்டதால், அவரைக் கைதுசெய்ய முடியவில்லை எனவும் மேற்படி சந்தேக நபர் இதுபோன்ற இன்னும் மேலதிகமாக நான்கு திருட்டுச் சம்பவங்களை செய்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, திருட்டுப் பொருட்களை உடன் வைத்திருந்த குற்றத்திற்காக சந்தேக நபரின் மனைவி கைதுசெய்யப்பட்டு தெல்தெனிய பதில் நீதவான் திருமதி சிரோமி நியானகம முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை தடுப்புக்காவலில் வைக்கும்படி பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# தந்தை செல்வாவின் 45ஆவது நினைவு தினம்







(யாழ். நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், நேற்று (26) செவ்வாய்க்கிழமை ஓய்வுநிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுத் தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசனின் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், உள்ளூராட்சிமன்றதவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

## மன்னாரில் பட்டப்பகலில் பெண் ஒருவரின் நகை அறுப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் இலங்கை வங்கிக்கு அருகாமையில் பெண் ஒருவரின் சங்கிலி இனந்தெரியாத நபர்களால் அறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

உப்புக்குளம் பகுதியை நோக்கி பயணித்த பெண் ஒருவரின் பின்னால் இருந்து நகை அறுக்கப்பட்ட நிலையில் சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

சம்பந்தப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ள நிலையில், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



சுற்றுச்சூழலுக்கு நீதி வேண்டும் எனக் கோரி யாழ். மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் அமைந்துள்ள யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பெண்ணொருவர் பதாகையை தாங்கியவாறு போராட்டம் நடத்தியுள்ளார்.

## ஆலய முன்றலில் திருடப்பட்ட மோட்டார்சைக்கிள் மறுநாள் மீட்பு!

(யாழ். நிருபர்)

மோட்டார்சைக்கிளை இயங்குநிலையில் விட்டுவிட்டு ஆலய தரிசனத்தில் ஈடுபட்டவரின் மோட்டார்சைக்கிள் திருடப்பட்டிருந்த நிலையில் மறுநாள் அதே ஆலயவளாகத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம், அராலி வீதியில் கல்லுண்டாய்வெளி ஊடாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணித்த இளைஞன் ஒருவர் அப்பகுதியிலுள்ள வைரவர் ஆலயத்திற்கு முன்பாக தனது மோட்டார் சைக்கிளை இயங்கு நிலையில் நிறுத்திவிட்டு, வைரவரை தரிசனம் செய்துள்ளார்.

அவ்வேளையில் அவரது மோட்டார்சைக்கிளை இளைஞன் ஒருவர் திருடிக்கொண்டு அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். அது தொடர்பில் மோட்டார்சைக்கிளின் உரிமையாளர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில்திருடப்பட்ட வைரவர்ஆலயம்முன்பாகதிருடப்பட்ட மோட்டார்சைக்கிள் அநாதரவான நிலையில் காணப்பட்டுள்ளது. அது தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் மோட்டார்சைக்கிளை மீட்டுச் சென்றுள்ளனர்.

## தமிழ்க் கட்சிகளுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு



(யாழ். நிருபர்)

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் யாழில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்கை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் (25) இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோரே சந்திப்பில் பங்கேற்றனர்.

## வீதி விபத்து தொடர்பில் மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தாவிட்டால் மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கும்

### சுகாதார வைத்திய அதிகாரி சுதோகுமார்

(சாவகச்சேரி நிருபர்)



வீதி விபத்து தொடர்பாக மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தாத பட்சத்தில் விபத்து மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (25) சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டட திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி நிலப்பரப்பு மற்றும் சனத்தொகை இரண்டாலும் பெரிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவாகக் காணப்படுகிறது.

ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவுகள் 35 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குள் உள்ளடங்குகின்றன. ஆனால், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு 284 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக்கொண்ட பாரிய பிரதேசமாகக் காணப்படுகிறது. தென்மராட்சிக்கென தனியான ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாமை இந்தப் பிரதேசத்தை பிரிக்க முடியாமைக்கு ஒரு காரணமாக காணப்படுகிறது.

பத்தாயிரம் சனத்தொகை கொண்ட காரைநகருக்கும் ஒரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைதான். அதேவேளை, 69 ஆயிரம் பேரைக்கொண்ட தென்மராட்சிக்கும் ஒரே ஒரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைதான் காணப்படுகிறது. ஒதுக்கீடுகளும் ஒரே அளவில்தான் காணப்படுகின்றன. காரைநகர் பத்தாயிரம் பேரை கொண்டுள்ளபோதிலும் தனி பிரதேச செயலகம், தனியான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன காணப்படுகின்றன.

அத்துடன், வைத்தியசாலைகளில் கட்டடங்களை அமைத்து அபிவிருத்திசெய்யும் அதேவேளை, மக்கள் விரும்பி நாடும் விதத்தில் வைத்தியசாலை செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும்.

மக்கள் நாடும் அளவிற்கு எமது சேவை இருக்க வேண்டும். பெரும்பாலான மக்கள் உடனடியாக சிகிச்சை பெற்று வீடு திரும்பவே விரும்புவர். அதற்காகவே தனியார் மருத்துவமனைகளை நாடுகின்றனர். அப்படியான துரிதமாக நோயாளிக்கு சிகிச்சையளித்து வீட்டிற்கு அனுப்பக்கூடிய நவீன முறைமைகளை அரச மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டும்.

எம்மிடமுள்ள ஆளணியைப் பயன்படுத்தி சிறந்த வைத்திய சேவையை மக்களுக்கு கொடுக்க முடியும். சாவகச்சேரி வைத்தியசாலை இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது.

இன்றைய சமூகத்தில் டெங்கு மரணம், கர்ப்பிணி மரணம், சிசு மரணம் என்றால் பெரிய பேசுபொருளாக காணப்படுகிறது. ஆனால், வீதி விபத்துகளை எவரும் பெரிதாக கணக்கில் எடுப்பதில்லை.

சிலவேளைகளில் எமது பகுதியில் மாதத்திற்கு 10-15 பேர் வரை வீதி விபத்தில் மரணிக்கின்றனர். அண்மையில் கூட மிருசுவில் ரயில் கடவை ஒன்றில் பாரிய விபத்து. அந்தக் கடவையில் இதுவரை 5 பேர் ரயில் மோதி மரணமடைந்துள்ளனர். இது தொடர்பாக விழிப்புணர்வு மிக அவசியம். தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் இவ்வாறான நடவடிக்கைகளிலும் முன்நின்று செயற்பட்டு தேவையற்ற மரணங்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## பொன்னாலையில் கடற்படையின் காணி அபகரிப்பு தடுத்துநிறுத்தம்!



சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை தெற்கு பகுதியில் பொதுமக்களின் காணிகளை அபகரிக்க கடற்படை மேற்கொண்ட முயற்சி நேற்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

பொன்னாலை சந்திக்கு அண்மையில் ஜே/ 170 கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்களுக்கு சொந்தமான காணியில் கடற்படையினர் கடற்படை முகாமை அமைத்து இருந்துவந்த நிலையில், நேற்று குறித்த காணியில் நில அளவீட்டை மேற்கொள்வதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் வந்தனர்.

இதன்போது, காணி உரிமையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பினை அடுத்து குறித்த காணியினை அளவீடு செய்ய முடியாது திரும்பிச் சென்றனர்.

## தனது பிறந்தநாளில் விபத்தில் உயிரிழந்துள்ள இளைஞன்

(யாழ். நிருபர்)

தனது பிறந்தநாளில் மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனும் மற்றுமொரு இளைஞனும் நேற்று முன்தினம் (25) மோட்டார்சைக்கிளில் சென்றபோது மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

அதில் பயணித்த யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் பகுதியைச் சேர்ந்த குணசேகரன் நிக்சன் (வயது 22) எனும் இளைஞன் உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த ரவிகரன் கனிஸ்டன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் பிறந்தநாள் நேற்று முன்தினமாகும். அந்நாளில் இருவரும் மோட்டார்சைக்கிளில் அராலி - வல்லை வீதியில் பயணித்தவேளை தெல்லிப்பழை, அம்பனை சந்திக்கு அருகில் மோட்டார்சைக்கிளில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக இருந்த வேலி தூணுடன் மோதி விபத்துக்குள்ளானது. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வர்த்தகர்கள் - உணவக உரிமையாளர்கள் மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும்

### தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தன்

தேநீர் மற்றும் வடை போன்றவற்றை உண்பதற்கே அதிக பணங்களை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் வர்த்தகர்கள், உணவக உரிமையாளர்கள் மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும் - என தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தன் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நிஷாந்தன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி என்பது நாடு முழுவதும் உள்ள மக்களை பாதித்தாலும் அதிகளவில் தென்னிலங்கையையே பாதிக்கின்றது. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை கடந்த 30 வருடங்களாக தமிழ் மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்பது யதார்த்தமான உண்மை. இன்றுதான் தென்னிலங்கை மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்த பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமைகளால் மக்கள் சரியான துன்பத்தை அனுபவித்து வருகின்றார்கள். குறிப்பாக, வடக்கு, கிழக்கில் இது அதிக தாக்கத்தைச் செலுத்தி வருகின்றது.

பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளும் அரசியல் பிரதிநிதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெரியளவில் கவனத்திற்கொள்ளவில்லை என்பது கவலையான விடயம்.

குறிப்பாக, உணவு விற்பனை நிலையங்களை எடுத்துக்கொண்டால் தேநீர் மற்றும் வடை போன்றவற்றை உண்பதற்கே அதிக பணங்களை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் வர்த்தகர்கள், உணவக உரிமையாளர்கள் மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும். தற்போது அதிகளவான இலாபத்திற்கு உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மனச்சாட்சிக்கு விரோதமாக உணவக உரிமையாளர்கள் செயற்படுகின்றார்கள். இதனை நாம் குறை கூறவில்லை. ஆனால், திருத்திக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக வடைக்கும் பரோட்டாவுக்குமான விலை என்பது 300 ரூபா, 400 ரூபா வரை போவது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் - என்றார்.

## யாழில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில் ஆளுநர் பங்கேற்பு



இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6.20 மணிக்கு மௌலவி சுபியான் தலைமையில் சர்வமதத் தலைவர்கள் பங்குபற்றுதலுடன் யாழ். தனியார் விருந்தினர் விடுதியில் சிறப்பாக இடம்பெற்றது.

நபிகள் பெருமானின் ஐந்து தொழுகைகளில் ஒன்றாக விளங்குகின்ற நோன்பிருத்தல், ஏழு வயதிற்கு மேற்பட்ட முஸ்லிம்களினால் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டார்.


திகதி 25.04.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4743
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,093,100.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 2 4 2 2 8 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,896,043.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 773
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,512,740.00
O வெற்றி இலக்கினம் 01 17 66 72 வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,620,918.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0052
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,246,860.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 26 39 41 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,895,108.80

கோடி 24+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1091
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,765,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 248,982,998.00
M 11 36 46 63 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மட்டக்களப்பில் தந்தை செல்வாவின் 45ஆவது சிராத்த தினம் அனுஷ்டிப்பு

(வெல்லாவெளி நிருபர்)

தமிழ் இனத்தின் அடையாளமாக திகழ்ந்தவரும், தமிழ்த் தேசிய பற்றாளருமான தந்தை செல்வாவின் 45ஆவது சிரார்த்த தினம் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நேற்று (26) காலை 09.00 மணிக்கு மட்டக்களப்பு தந்தை செல்வா நினைவு முற்றத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான பொன்.செல்வராசா தலைமையில் இடம்பெற்றது.

தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு அதிதிகளினால் மலர்மாலை அணிவித்து, தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறீநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான மா.நடராஜா, இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன், முன்னாள் அரசாங்க அதிபர் மா.உதயகுமார், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், மதப் பெரியார்கள், பெண்கள் மற்றும் தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தலைவர்கள் நடத்திய போராட்டங்களை எவ்வாறெல்லாம் சிங்களத் தலைவர்கள் அடக்கினார்களோ அதேபோல் இன்று சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களாலேயே விரட்டும் நிலையாக மாறிவிட்டது என்பதை சிந்திக்க வேண்டும். தந்தை செல்வா என்றொரு தலைவர் இல்லாமல் இருந்திருந்தால் ஈழத்தமிழரின் அடையாளம் இல்லாமல்போயிருக்கும். தந்தை செல்வாவின் 45ஆவது நினைவு தினத்தை இன்று நாம் அனுஷ்டிக்கிறோம் அவரின் தீர்க்கதரிசனமே இன்று இலங்கையில் தமிழர்களுக்கு






அடையாளமிட்டது. தந்தை செல்வா என்ற தலைவர் இல்லாமல் இருந்திருந்தால் ஈழத்தமிழர்கள் முகவரி அற்றவர்களாகவும் தமிழின அடையாளம் இல்லாதவர்களாவும் இருந்திருப்பர்.

இன்று காலிமுகத்திடலில் சிங்கள மக்கள் திரண்டு குடும்ப ஆட்சிக்கு எதிராக போராடுகிறார்கள். ஆனால், இதே காலி முகத்திடலில்தான் கடந்த 1956ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கவால் தனிச்சிங்கள சட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரித்த தினத்தில் இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வா தலைமையில் இந்த சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெற்றது.

அந்தப் போராட்டத்தை அடக்குவதற்காக முள்வேலி அமைக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பொலிஸாரை வரவழைத்து தடுத்தனர். இதையும் மீறி இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் மக்கள் சிலரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியபோது குண்டாந்தடியால் தாக்கப்பட்டு தமிழர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களான தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்றவர்கள் இரத்தம் சிந்தினர்.

இரத்தக்காயங்களுடன் இரத்தக்கறை படிந்த உடையுடன் நாடாளுமன்ற அமர்வில் தாம் தனிச்சிங்கள சட்ட மசோதாவை எதிர்த்துப்பேசி அந்த சட்டத்திற்கு எதிராக வாக்களித்த வரலாறுகள் உள்ளன. அந்த உண்மை நிலையை 66 வருடங்கள் கழித்து ஒரு நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியான கோட்டாபயவின் உத்தியோகபூர்வ செயலகம் அமைந்துள்ள காலிமுகத்திடலில் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ய இறைவன் தீர்ப்பாக அமைந்துள்ளது.

1956இல் தமிழர்களை அடக்க காலிமுகத்திடலில் அமைந்த நாடாளுமன்றம் பொலிஸாரால் சுற்றிவளைத்து பாதுகாக்கப் பட்டது. அதே நாடாளுமன்ற கட்டடம் தற்போது ஜனாதிபதி செயலகமாக உள்ள நிலையில், அதைச் சுற்றி சிங்கள மக்கள் நின்று “கோட்டாபயவே வெளியேறு” என கூக்குரலிடும் காட்சி, எமக்கெல்லாம் எமது தமிழ்த் தலைவர்கள் நடத்திய போராட்டங்களை எவ்வாறெல்லாம் சிங்களத் தலைவர்கள் அடக்கினார்களோ அதேபோல் இன்று சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களாலேயே விரட்டும் நிலையாக மாறிவிட்டது என்பதை சிந்திக்க வேண்டும். அஹிம்சைப் போராட்டங்கள் என்றால் என்ன என்பதையும், ஆயுதப் போராட்டம் என்றால் என்ன என்பதையும் வடக்கு, கிழக்கு மக்கள் நன்கு அறிந்தவர்கள். ஆனால், சிங்கள மக்கள் அதை அறிந்திருந்தாலும் தமிழ் மக்கள் போராடும்போது வேடிக்கை பார்த்து எமது உண்மையான போராட்டங்களை உதாசீனம் செய்தவர்களும் உண்டு.

இன்று வடக்கு, கிழக்கு தமிழ் இளைஞர்களும் காலிமுகத்திடலுக்கு போராட வருமாறு சிங்கள இளைஞர்கள் அழைக்கின்றனர். நல்ல விடயம் வடக்கு, கிழக்கு இளைஞர்கள் தமது உரிமைக்காக பல தடவைகள் போராடி வருகின்றனர். இந்த உண்மையை சிங்கள மக்கள் ஏற்றுக்கொண்டு வடக்கு - கிழக்கு இணைந்த தீர்வை வழங்கவும் சிங்கள மக்கள் ஆதரவு நல்கவேண்டும். இதை இன்றைய தந்தை செல்வாவின் 45ஆவது நினைவு தினத்தில் வலியுறுத்துவது எமது கடமையாகும் எனவும் மேலும் கூறினார்.

## 15 மில்லியன் நிதியொதுக்கீட்டில் சீனக்குடா ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் திறப்பு




(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண PSDGஇன் 15 மில்லியன் நிதியொதிக்கீட்டின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட சீனக்குடா ஆரம்ப சுகாதார பராமரிப்பு வைத்திய நிலையத்தை மக்கள் பாவனைக்கு திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று (26) திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.ஜீ.எம்.கொஸ்தா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த ஆரம்பப் பராமரிப்பு வைத்திய நிலையத்தை திறந்துவைத்தார்.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் மோகன குமரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் வி.குகேந்திரன், குறித்த வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் திருமதி ஆர்.முஜீஸ் உள்ளிட்ட மாகாண திணைக்கள அதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சாய்ந்தமருது பயிற்சி நிலைய 10 ஆண்டுகள் நிறைவினை முன்னிட்டு விசேட நிகழ்வு!




(மாளிகைக்காடு, கல்முனை நிருபர்கள்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு பயிற்சி நிலையத்தின் இளைஞர் கழகம் ஏற்பாடு செய்த விசேட நிகழ்வும் வருடாந்த இப்தார் வைபவமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரீ.எம்.ஹாறூன் தலைமையில் நேற்று முன்தினம் (25) மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், மேலும் விசேட அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர் ஏ.லத்திப், அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ.முபாரக் அலி, மருதமுனை பரக்கத் டெக்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஐ.ஏ.பரீட், ஓய்வுபெற்ற மாவட்ட பதிவாளர் ஜமால் முஹம்மட், அல்-அமானா நற்பணி மன்றத் தலைவர் ஏ.எல்.பரீட், சாய்ந்தமருது பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.எம்.ஷமீலுள் இலாஹி, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் போதனாசிரியர்கள், இளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் பிரதிநிதிகள், மாணவ மாணவிகள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய சாய்ந்தமருது பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரீ.எம்.ஹாறூன், கடந்த 10 வருடங்களில் இந்த பயிற்சி நிலையத்தின் மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்றமை குறித்து சிலாகித்து பேசியதுடன், இந்த பயிற்சி நிலையத்தை சாய்ந்தமருதில் நிறுவி பல்லின மாணவர்களும் பயன்பெற உறுதுணையாக இருந்த அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், கட்டடத்திலும் ஏனைய வளங்களிலும் உள்ள பற்றாக்குறைகள் தொடர்பில் எடுத்துரைத்து இளைஞர்களின் ஒத்துழைப்புடன் அதற்கான தீர்வை பெறவேண்டிய அவசியம் குறித்து விளக்கினார். இதன்போது குறித்த பயிற்சி நிலையத்தில் கடமையாற்றி அண்மையில் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தருக்கு சேவை நலன் பாராட்டி கௌரவமளிக்கப்பட்டது.

## காரைதீவு பிரதேச செயலகத்தில் புதிய கணக்காளர் பதவியேற்பு

(கல்முனை, மாளிகைக்காடு நிருபர்கள்)



காரைதீவு பிரதேச செயலகத்தின் கணக்காளராக ஏ.எல்.எப்.றிம்சியா அர்சாட் தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

காரைதீவு பிரதேச செயலக கணக்காளராக கடமையாற்றிய என்.ஜெயசர் மிகா இடமாற்றம் பெற்றுச்சென்றதையடுத்து காரைதீவு பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக திருமதி றிம்சியா அர்சாட் தமது கடமைகளை நேற்று முன்தினம் (25) பொறுப்பேற்றுக்கொண்டார்.

இறக்காமம் பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றிய நிலையில் இடமாற்றம் பெற்ற ஏ.எல்.எப்.றிம்சியா அர்சாட்டை வரவேற்கின்ற நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான், காரைதீவு, இறக்காமம், பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்துறை பட்டப்படிப்பில் விசேட சிறப்புத் தேர்ச்சிபெற்று, இலங்கை கணக்காளர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து இறக்காமம் பிரதேச செயலகத்தில் கணக்காளராக சுமார் 8 வருடங்கள் கடமையாற்றி நிலையில், இடமாற்றம் பெற்ற ஏ.எல்.எவ்.றிம்சியா காரைதீவு பிரதேச செயலகத்தில் கணக்காளராக பதவியினை பொறுப்பெற்றுக்கொண்டதுடன், பதில் கணக்காளராகவும் இறக்காமம் பிரதேச செயலகத்தில் செயற்படும்வண்ணம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வானது நேற்று (26) பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து இடம்பெற்றது. பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வானது சர்வோதய நிறுவனம், ஹேமாஸ், டயலொக் ஆகிய நிறுவனங்கள் இணைந்து சுமார் 2500 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள், 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு இலட்சம் உலருணவுப் பொதிகள் வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் விசேட தேவையுடையோர், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் என்ற அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்காக வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சர்வோதய நிலைய வடக்கு, கிழக்கு பணிப்பாளர் வீ.ஜீவராஜ், டயலொக் நிறுவன பிராந்திய முகாமையாளர், சமூகசேவை உத்தியோகத்தர் ப.சுதன் மற்றும் பயனாளிகள் என பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## ஊடகர் றியாஸ் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



அட்டாளைச் சேனை, கோணாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஏ.எல்.றியாஸ் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.முஹம்மட் ஹம்சா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம் மற்றும் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவராகவும், அல்-நஜா விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்றார்.

பாடசாலை அபிவிருத்திக் குழு, கிராம அபிவிருத்திச் சங்கம், சிவில் பாதுகாப்புக் குழு, விளையாட்டுக் கழகங்கள் எனப் பல்வேறு பொது அமைப்புகளில் பதவிகளையும் வகித்து, அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பெரும் பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாடகமும் அரங்கியலும் பயிற்சிப்பட்டறை



(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்தின் மண்முனை தென் எருவில்பற்று கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பிரிவில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்கும் மாணவர்களுக்கான ஒருநாள் பயிற்சிப் பட்டறை நேற்று (26) கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் திருமதி வனிதா சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி பட்டறையில் இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் நாடகமும், அரங்கியலும் பாடத்தின் செயல்முறை பரீட்சைக்கு முகங்கொடுக்கவுள்ள மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதில் வளவாளர்களாக ஆசிரியர்களான பாலச்சந்திரன், பத்மநாதன், லதா சந்திரலிங்கம், சுகுதினி குணசீலன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர். இங்கு கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய அதிபர் க.செல்வராஜாவினால் மாணவர்களுக்கான ஆரம்ப அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், வளவாளர்களினால் மாணவர்கள் செயன்முறைப் பரீட்சைக்கு எவ்வாறு முகங்கொடுக்கவேண்டும், அதன் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகள், நாடகமும், அரங்கியலும் பாடப்பரப்பில் அடங்கும் முக்கிய விடயங்கள் தொடர்பில் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.



# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கிரானில் கைதான 10 பேர் விடுதலை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கிரான் கடற்கரையில் கடந்த வருடம் மே 18 முள்ளிவாய்க்கால் படுகொலையின் நினைவேந்தலை நினைவு கூர்ந்தமைக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 10 பேரையும் சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் (25) வழக்கிலிருந்து விடுவித்து விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

வடக்கு, கிழக்கு முன்னேற்ற கழகத் தலைவர் வி.லவக்குமார் தலைமையில் கடந்த மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலை கிரான் கடற்கரையில் சுடர் ஏற்றி நினைவுகூர்ந்தனர்.

இந்த நினைவேந்தலை நினைவு கூர்ந்த வடக்கு, கிழக்கு முன்னேற்ற கழகத் தலைவர் வி.லவக்குமார் உட்பட 10 பேரை கல்குடா பொலிஸார் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் கடந்த டிசம்பர் 8ஆம் திகதி 10 பேரையும் அவர்களைத் தொடர்ந்து வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் பிணையில் விடுவித்தார்.

குறித்த 10 பேருக்குமான வழக்கு வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் இவர்கள் அனைவரையும் நீதவான் இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

# கிழக்கில் குறைந்த வருமானம் பெறும் பத்தாயிரம் குடும்பங்களுக்கு உதவி வழங்க சீனா தீர்மானம்

## மாகாண ஆளுநருடனான சந்திப்பில் சீனத் தூதுவர் தெரிவிப்பு

(கிண்ணியா நிருபர்)



இலங்கையில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க சீன அரசுக்கு சொந்தமான 'பெட்ரோசினா' நிறுவனத்திடம் இருந்து 7,30,000 மெட்ரிக் தொன் எரிபொருளை 19 எண்ணெய்க் கப்பல்களுக்கு சீன தேசிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுப்பியுள்ளது - என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துடனான விசேட நேர்காணலில் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷி செங்ஹொங் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீன அரசாங்கம் இலங்கைக்கு அனைத்து உதவிகளையும் செய்யும் என்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள சீனத் தூதரகத்தில் கிழக்கு ஆளுநருக்கும் சீனத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறும் 10,000 குடும்பங்களுக்கு எதிர்காலத்தில் உதவிகள் வழங்கப்படும் எனவும் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சீன முதலீடுகள் ஸ்தாபிக்கப்படுவதன் காரணமாக மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக அதிகரிக்கும் என ஆளுநர் தெரிவித்தார்.

விவசாயம், பால் உற்பத்தி, மீன்வளம், திண்மக்கழிவு மேலாண்மை, சுற்றுலா மற்றும் கனியவளம் பிரித்தெடுத்தல் உள்ளிட்ட பல துறைகளில் சீன முதலீடுகளை ஆளுநர் இதன்போது விவரித்தார்.

எவ்வாறாயினும், தற்போதைய நெருக்கடியின்போது, இலங்கையின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளின் மேலதிக கல்விக்காக பணத்தை நன்கொடையாக வழங்கிய சீனாவின் கைபே ஆரம்பப்பள்ளி மாணவர்களின் உதவியை ஆளுநர் பாராட்டினார்.

இதேவேளை, 1952ஆம் ஆண்டு சீன - இலங்கை ரப்பர் - அரிசி ஒப்பந்தத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை நாம் பெருமையுடன் கொண்டாட முடியும் என சீனத் தூதுவர் நினைவுறுத்தினார்.

# மட்டு. மாநகர சபையால் கல்லடி வேலூர் கதிர்காமத்தம்பி வீதி புனரமைப்பு!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையின் 2021ஆம் ஆண்டு பாதீட்டு ஒதுக்கீட்டின் கீழ் கல்லடி- வேலூர் கதிர்காமத்தம்பி வீதி தார் வீதியாகச் செப்பனிடும் பணிகள் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவனின் மேற்பார்வையில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்றது.

இவ்வீதியானது கல்லடி, வேலூர் காளிகோவில் வீதியையும், புதிய கல்முனை பிரதான வீதியையும் இணைக்கும் வீதியாகும் என்பதுடன், மிக நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் இருந்தது. இந்நிலையில், அப்பிரதேசவாசிகளின் கோரிக்கைக்கமைவாக மட்டக்களப்பு மாநகர சபையின் பாதீட்டின் ஒதுக்கீட்டில் புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், மட்டக்களப்பு மாநகர சபையில் தற்போது ஏற்பட்டுள்ள நிர்வாக மாற்றத்தினால் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**தம்பி சொல்லுறாரு இடைக்கால அரசு அமைக்க தாம் தயாராம்.. அண்ணர் சொல்லுறாரு இடைக்கால அரசினால் பயன் ஏதும் இல்லையாம்.. தம்பி கோட்டாவும், அண்ணன் மஹிந்தவும் மாறி மாறி கதயாம ஒரேயடியாக ஆள்மாறுதுதான் நல்லம் எண்டுதானே அந்த சிங்கள மக்கள் காலிமுகத்திடலில போராடுகிறார்கள். மறுகா ஏன் சும்மா பேய்காட்டிறயள் உட்டுத்து ஓடவேண்டியதுதானே!**





**மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட நாட்களின் பின்னர் எரிபொருளுக்கான வரிசை நீக்கப்பட்டு வழமையை போன்று எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. (காத்தான்குடி நிருபர்)**

# கந்தளாயில் மனநிலை பாதிக்கப்பட்ட குடும்பஸ்தரை காணவில்லை



(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரசா நகர் இல 163/1 பேராறு பகுதியைச் சேர்ந்த மூன்று குழந்தைகளின் தந்தையான என்.ரபிஸ் (வயது 30) ஒரு வாரமாக மனநிலை பாதிக்கப்பட்டு காணவில்லையென கந்தளாயில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காணாமல்போனவரின் தந்தை தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை (22) அதிகாலையிலிருந்து காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த நபர் கடைசியாக அணிந்திருந்த சிவப்பு கலர் ரீ சேட் அணிந்திருந்ததோடு, EP UU 4187 இலக்கத்தகடு உடைய மோட்டார்சைக்கிளுடன் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவரை யாராவது கண்டால் அறியத்தருமாறு அவரது தந்தை நசார் கேட்டுள்ளார்.

# அம்பாறையில் பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையம் அலுவலக ஊழியர்களின் குழந்தைகளுக்காக திறப்பு





(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி அனைத்து அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் புதிய தோற்றத்துடன் அம்பாறை மாவட்ட செயலகப் பகல்நேர பிள்ளைகள் பராமரிப்பு நிலையம் அம்பாறையில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பகல்நேர பராமரிப்பு மையம் பிரத்தியேக அறங்காவலர் குழுவால் நிர்வகிக்கப்பட்டு இயக்கப்படுகிறது. தொழில்புரியும் பெற்றோரின் வசதிகருதி அமைக்கப்பட்டுள்ள இந்த பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, பொழுதுபோக்கு வசதிகள், பொருத்தமான உணவு என்பன வழங்கப்படவுள்ளன.

காலை 7.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை இச்சிறுவர் பராமரிப்பு மையம் திறந்திருக்கும் எனவும் ஒன்றரை வயதுமுதல் எட்டு வயதுள்ள குழந்தைகள் இப்பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தெரிவித்தார்.

# கிண்ணியா நகர சபையின் 49ஆவது அமர்வு; கறுப்பு சால்வை அணிந்துவந்த உறுப்பினர்





(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா நகர சபையின் 49ஆவது அமர்வு தவிசாளர் எம்.எம்.நிவாஸ் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி) தலைமையின் கீழ் நேற்று முன்தினம் (25) பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெற்றது.

கிண்ணியா நகர சபையில் மொத்தம் தவிசாளருடன் சேர்த்து 13 உறுப்பினர்களாகும். சபை நடவடிக்கை சமய அனுஷ்டானத்துடன் ஆரம்பமானது. தவிசாளர், உட்பட இரண்டு உறுப்பினர்களின் பிரேரணை உட்பட 11 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, வீதியிலிருந்து சபைக்கு கையில் கறுப்புப் பட்டியும், தோலில் கறுப்பு சால்வையும் அணிந்து சபைக்குள் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர் எம்.எம்.நசுர்தீன் வருகை தந்திருந்தார். நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர் எம்.எம்.நசுர்தீன் மூன்று பிரேரணைகளை சமர்ப்பித்தார்.

அவற்றில் ரம்புக்கனையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்தின்போது துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவருக்கான பிரேரணையையும் முன்வைத்தார். அத்துடன், அவரது குடும்பத்தாருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார். இதன்போது சபை அமர்வில் கடும் வாதப் பிரதிவாதமும் இடம்பெற்றது.

சபை நடவடிக்கையின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலங்கேணி வட்டார உறுப்பினர் சிவசேகரம் பஞ்சலிங்கம், தனது வட்டாரத்துக்கும் தமிழ் மக்களுக்கும் முன்னாள் தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம் புறக்கணிப்புச் செய்ததாகக் கூறினார். இதனால் முன்னாள் தவிசாளருக்கும் சிவசேகரம் பஞ்சலிங்கத்துக்கும் இடையிலான வாக்குவாதம் இடம்பெற்றது.

முன்னாள் தவிசாளர், தான் பாகுபாடு இல்லாமல் எல்லா வட்டார உறுப்பினர்களுக்கும் சகலவிதமான அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அதற்கான ஆதாரம் தன்னிடம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து ஏனைய உறுப்பினர்களும் இவ்விடயத்தில் கதைக்கத் தொடங்கியதில் சபை வாக்குவாத இடமாக மாறியது. பின்னர் தவிசாளர் (எம்.எம்.நிவாஸ்) இருவரையும் சமாதானப்படுத்தி ஒரு நிலைக்கு கொண்டுவந்தார். இதனையடுத்து சபை நடவடிக்கை அடுத்த மாதம் கூடுவதாக கூறப்பட்டு நிறைவுற்றது.

# கார்பட் இட்டு புனரமைக்கப்பட்ட வீதி மீண்டும் சேதம்

## பொதுமக்கள் விசனம்



(மீராவோடை நிருபர்)

அண்மையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட ஓட்டமாவடி புகையிரதக் கடவை வீதி மீண்டும் சேதமடைந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி பாலத்தை அண்மித்த புகையிரத பாதையை குறுக்கறுத்துச் செல்லும் கார்பட் வீதி சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வீதியால் பயணிக்கும் நபர்கள் தண்டவாளத்தில் சறுக்கி விழுந்து மரணித்துள்ளதுடன், பலரும் பாதிப்படைந்துள்ளனர்.

நீண்டகாலமாக கவனிப்பாறற்றுக் கிடந்த குறித்த வீதி தொடர்பான செய்திகள் ஊடகங்களில் பிரசுரமானதற்கமைய அதனை ஓட்டமாவடி பிரதேச சபை நடவடிக்கை எடுத்து குறித்த வீதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

அண்மையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குறித்த வீதி மீண்டும் சேதமடைந்து காணப்படுகிறது. இவ்வீதியால் பயணிக்கும் நபர்கள் தொடர்ந்தும் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியை கவனமெடுத்து மீண்டும் சிறந்த முறையில் புனர்நிர்மாணம் செய்து தருமாறு பொதுமக்கள் வேண்டிக்கொள்கின்றனர்.






ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி கொழும்பு, காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர் ஆர்ப்பாட்டத்தின் 17ஆம் நாளான நேற்று முன்தினமும் (25) பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

(படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

## வெள்ளவத்தை மெதடிஸ்ட் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட இப்தார் நிகழ்வு



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தர்ம சக்தி அமைப்பு மற்றும் கிரேண்ட்பாஸ் மத நல்லிணக்க சபை இணைந்து முதல் முறையாக வெள்ளவத்தை மெதடிஸ் தேவாலயத்தில் மத நல்லிணக்கத்தை நோக்காகக்கொண்டு இப்தார் நிகழ்வொன்றை நேற்று முன்தினம் (25) நடத்தின.

இந்நிகழ்வில் தர்ம சக்தி அமைப்பின் தலைவர் பல்லே கந்த ரத்னசார ஹிமி, உப தலைவர் பாதர் ஆசிரி பெரேரா, செயலாளர் மாதம்பாகம அஸ்ஸஜீ நாயக்க ஹிமி, உப செயலாளர் அனுர பெரேரா, பொருளாளர் அஷ் ஷேக் பிர்தௌஸ் மற்றும் கிரேண்ட்பாஸ் மத நல்லிணக்க சபையின் பிரதித் தலைவர் அஷ் ஷேக் ஷாபி ரஷாதி, செயலாளர் அஷ் ஷேக் பஹ்மி ஸாதாத் மற்றும் உறுப்பினர்கள், அ.இ.ஜம்இய்யதுல் உலமாவின் உப செயலாளர் அஷ் ஷேக் தாஸிம் மற்றும் உலமாக்கள், சகோதர மதத் தலைவர்கள், அல்ஹாஜ் இப்ராஹிம், வெள்ளவத்தை, தெஹிவளை பகுதிகளைச் சேர்ந்த பள்ளி நிர்வாகிகள் கிரேன்ட்பாஸ் மஸ்ஜித் முஹியத்தீன் ஜும்ஆ பள்ளி நிர்வாகிகள் மற்றும் பல ஏனைய மத சகோதரர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## யாப்பு சீர்திருத்தத்துடன் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நகர வேண்டும்

### ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. கோரிக்கை



மக்கள் இன்று முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டு யாப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு நகர வேண்டும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று நாடு முகங்கொடுக்கின்ற சவால்களை வெற்றிகொள்வதில் சட்டமன்றத்தின் பொறுப்புகளானது, தட்டிக் கழித்துவிட்டு முன்னேற முடியுமான பொறுப்புகளல்ல. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது மக்கள் அபிப்பிராயத்தை தட்டிக் கழித்துவிட்டு செயற்படுவது யதார்த்தமானதல்ல என்பதை அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

மதிப்புக்குரிய மகாநாயக்க தேரர்கள், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் மற்றும் சர்வமதத் தலைவர்களின் வேண்டுகோளானது அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்து பிரச்சினைகளுக்கான முடிவுகளை காணலாம் என்பதாகும். இந்த ஆலோசனைக்கு ஐக்கிய மக்கள் சக்தியானது எந்தவிதமான தயக்கமுமின்றி பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

இங்கு நாட்டு மக்களின் வேண்டுகோளுக்கமைய அரசியல் மாற்றம் இடம்பெறுவது அத்தியாவசியமானது என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்கிறோம். முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான செயற்பாடுகள் அவ்வாறே முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 21ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நடைமுறையிலுள்ள யாப்பின் ஊடாக வழங்கமுடியுமான ஆக்கபூர்வமான முடிவாக நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளினதும் ஒன்றிணைந்த சர்வகட்சி அரசொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த சர்வகட்சி ஆட்சியில் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளடங்கக் கூடாது என்பதோடு, அனைத்து கட்சிகளும் உள்ளடங்கலான ஒரு கட்டமைப்புசார் அமைப்பின் மூலம் குறிப்பிட்ட கால எல்லைக்கான திட்டத்தை வகுத்துச் செயல்பட வேண்டும். இக்காலகட்டத்தில் மக்கள் இன்று முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டு யாப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு நகர வேண்டும். இந்த சர்வகட்சி அரசுக்கு அவசியமான பெரும்பான்மையை குறுகிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டல்லாமல் மற்றும் தடைகள் ஏதுமற்ற நிலையில் வழங்குவதற்கு அனைத்து கட்சிகளும் தெளிவான உறுதிமொழியை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## நியூசிலாந்திலிருந்து வந்த பெண் கணவரால் தாக்கப்பட்டு கொலை!

### மேலும் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்ப்பு



### தற்கொலைக்கு முயற்சித்த சந்தேக நபர் கைது

(ஹேமந்த லியனபத்திரன)

தெல்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேபொட வடக்கு பகுதியில் திருமணமான 32 வயதான குடும்பப் பெண்ணொருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணின் கணவரால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ள நிலையில், சந்தேக நபர் கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தவேளை அயலவர்களால் காப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த நபரால் தாக்கப்பட்ட மேலும் இருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் வேபொட வடக்கைச் சேர்ந்த அப்சரா கல்பனி என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பெண் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்காக நியூசிலாந்துக்கு சென்றுள்ளார். அங்கு சென்று சில மாதங்களின் பின்னர் கணவருடன் தொடர்புகொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகிறது. கணவர் பலமுறை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயற்சித்தபோதிலும் அது கைகூடவில்லை.



இந்நிலையில், கொலைசெய்யப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் அவர் இலங்கைக்கு வந்துள்ளார். எனினும், கணவருக்கு அறிவிக்காமல் வசித்துவந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து அறிந்துகொண்ட கணவர் சம்பவ தினம் இரவு 7.15 மணியளவில் மனைவியின் வீட்டுக்கு வந்து கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கிக் கொலைசெய்துள்ளார். அதனைத் தடுக்க முற்பட்ட இருவரும் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து அவர் வீட்டிலுள்ள கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார். இதனை அறிந்த அயலவர்கள் அவரை மீட்டுள்ளதுடன், இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அங்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரான பெண்ணின் கணவரை கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் வெலிவேரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமித் குணவர்தன தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## புத்தளம் - அநுராதபுரம் வீதியில் பஸ் விபத்து



### ஆறு பேர் காயம்

(ஜூட் சமந்த)

புத்தளம் - அநுராதபுரம் வீதி, சிரம்பியடிய பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஆறு பேர் காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் (25) மாலை இடம்பெற்றுள்ளதுடன், வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த காரின் மீது தனியார் பஸ்ஸொன்று மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த காரின் மீது தனியார் பஸ் மோதியதையடுத்து, அதனை தொடர்ந்து கார் வீதியிலிருந்து விலகி புரண்டு சென்றுள்ளது. காரின் மீது மோதிய பஸ் முன்னால் சென்று மரமொன்றுடன் மோதியுள்ளது.

விபத்துக்குள்ளாகியுள்ள பஸ் கொழும்பிலிருந்து மன்னார் வரை பயணித்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து வந்து இலங்கையில் வசித்துவரும் சிலர் காரில் இருந்துள்ளனர். இந்த விபத்தில் காரிலிருந்த எவருக்கும் காயம் ஏற்பட வில்லை என்பதுடன், பஸ்ஸில் பயணித்த சிலரே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சாரதியினால் பஸ்ஸின் வேகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமையினால், இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸ் போக்குவரத்து பிரிவு முன்னெடுத்து வருகின்றது.





மக்கள் மீது தொடர் அழுத்தம் பிரயோகிப்பதை விடுத்து அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி நேற்று முன்தினம் (25) இரவு கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

(படப்பிடிப்பு – கிரிஷான் காரியவசம்)

# உலக செய்திகள்

## 30இல் இந்த ஆண்டின் முதல் சூரிய கிரகணம்




இந்த ஆண்டின் முதல் சூரிய கிரகணம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் கிரகணப் பகுதி சூரிய கிரகணமாக நள்ளிரவில் இடம்பெறவுள்ளதுடன், 30ஆம் திகதி நள்ளிரவு 12:15 மணிக்கு ஆரம்பித்து மறுநாள் அதிகாலை 4:08 மணிவரை சூரிய கிரகணம் நீடிக்கவுள்ளது.

அண்டார்டிகா, அட்லாண்டிக் பகுதி, பசுபிக் பெருங்கடல், தென் அமெரிக்காவின் தென்மேற்கு பகுதிகளில் இந்த சூரிய கிரகணத்தைப் பார்க்க முடியும்.

இந்த ஆண்டிற்கான இரண்டாவது சூரிய கிரகணம் எதிர்வரும் ஒக்டோபர் 25ஆம் திகதி நிகழ்கிறது. இதுவும் பகுதி சூரிய கிரகணமாகும்.

## ஹெல் நகரின் ஒருநாள் மேயராக மாறிய பூனை



அமெரிக்கா மிச்சிகன் மாகாணத்திலுள்ள ஹெல் என்ற சிறிய நகரின் மேயராக பூனையொன்று பதவியேற்ற சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரிய கண்களுடன் உடல் குறைபாட்டுடன் பிறந்த 'ஜிங்ஸ்' என்ற பூனை, தன் குறைபாட்டாலே சமூக வலைத்தளங்களில் பிரபலமானது. இந்நிலையில், 100 டொலர் பணம் செலுத்தி ஹெல் நகரின் மேயராக யார் வேண்டுமென்றாலும் பதவி வகிக்க அந்நகர நிர்வாகம் அனுமதியளித்தது.

இதையடுத்து ஜிங்ஸ்சின் உரிமையாளர் மியா 100 டொலர் செலுத்தி ஜிங்ஸை ஒருநாள் மேயராக்கினார். வெறும் 72 பேர் மட்டுமே வசிக்கும் ஹெல் நகரின் ஒரு நாள் மேயராக ஜிங்ஸ் பதவி வகித்தது.

## உலகின் மிக வயதான மூதாட்டி காலமானார்



உலகின் மிகவும் வயதான நபர் என நம்பப்பட்ட ஜப்பானை சேர்ந்த 119 வயது மூதாட்டி புகுவோகா நகரிலுள்ள மருத்துவமனையில் உயிரிழந்தார்.

கேன் டனகா என்ற அந்த மூதாட்டி 1903ஆம் ஆண்டு பிறந்தார். அவர் கடந்த 2019ஆம் ஆண்டு உலகின் மிகவும் வயதான நபர் என கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

# 3ஆம் உலகப் போர் மூளும் அபாயம்

## ரஷ்யா எச்சரிக்கை



உக்ரைனுக்கு எதிரான போர், 3ஆம் உலகப் போருக்கான உண்மையான ஆபத்து என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்த ரஷ்யா இன்று 63ஆவது நாளாகவும் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஒரே இரவில் உக்ரைனின் 423 இடங்களை குறிவைத்து ரஷ்யப் படைகள் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தியதுடன், உக்ரைனின் 26 இராணுவ இலக்குகளை அழித்துள்ளன. இந்தத் தாக்குதல் நேற்றும் தொடர்ந்தது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனிலுள்ள ரயில் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை முற்றிலும் அழிக்கும் வகையில் தாக்குதல் நடத்தியது.

இந்நிலையில், ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்துள்ள வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ்,

உக்ரைனுடனே பேச்சுவார்த்தைகள் தொடரும். ஆனால், உக்ரைன் அரசின் இராணுவ நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. உக்ரைன் எல்லை மீறினால் அது பேச்சுவார்த்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். நல்ல எண்ணத்திற்கும் வரம்புகள் உள்ளன.

அது பரஸ்பரமாக இல்லாவிட்டால் பேச்சுவார்த்தை நடைபெறுவதில் பலன் ஏதும் இருக்காது. அமைதி வழியில் செல்லவே ரஷ்யா விரும்புகிறது. உக்ரைனுக்கு மேற்குலக நாடுகள் உதவிகள் நீடித்தால் 3ஆம் உலகப் போரின் உண்மையான ஆபத்து தற்போதும் இருப்பதாக அவர் எச்சரித்துள்ளார்.

**மரியுபோலில் மூன்றாவது மிகப்பெரிய புதைகுழி கண்டுபிடிப்பு**

உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோலில், மூன்றாவது மிகப்பெரிய புதைகுழி இருப்பது செயற்கைக்கோள் புகைப்படத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

தி ரேடியோ லிபெர்ட்டி வெளியிட்டிருக்கும் தகவலில், பிளானெட் லேப்ஸ் செயற்கைக்கோள் எடுத்தனுப்பிய புகைப்படங்களை சான் பிரான்சிஸ்கோவை தலைமையகமாகக்கொண்ட புவியியல் புகைப்பட நிறுவனம், மரியுபோலின் ஸ்டார்யி க்ரிம் கிராமத்தில் 200 மீற்றர் அகலம் கொண்ட மிகப்பெரிய புதைகுழி




இருப்பதை கண்டுபிடித்துள்ளது. இந்த ஸ்டார்யி க்ரிம் கிராமத்தை மார்ச் 10ஆம் திகதி ரஷ்யப் படைகள் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# 7ஆவது ராய்சினா சர்வதேச மாநாடு டில்லியில்

## 90 நாடுகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் 210 பேர் பங்கேற்பு



டில்லியில் 7ஆவது ராய்சினா சர்வதேச மாநாட்டை பிரதமர் மோடி ஆரம்பித்து வைத்தார். போலந்து, சுலோவேனியா உள்ளிட்ட 90 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், முன்னாள் பிரதமர்கள் உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்றனர்.

இன்று மாநாடு முடிவடையவுள்ள நிலையில் ஜனநாயக மறுபரிசீலனை, பருவநிலை மாற்றத்தை கையாள்தல் உள்ளிட்ட 6 முக்கிய அம்சங்கள் குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

மாநாட்டின் இடையே பல்வேறு நாட்டு அமைச்சர்களுடன், இந்திய அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர். முன்னதாக தொடக்க விழாவில் பேசிய ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வோன் டெர் லெயன், இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஒரே வர்த்தக பாதையை பயன்படுத்துவதாக தெரிவித்தார்.

உக்ரைன் போரின் முடிவு ஐரோப்பாவின் எதிர்காலத்தை மட்டுமல்ல இந்தோ-பசுபிக் பிராந்தியம் உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் - என்றார்.

# சீனாவை மீண்டும் சீண்டும் கொரோனா

## இந்தியாவில் ஒரே நாளில் 1,399 பேர் பலி; பல்வேறு மாநிலங்களில் கட்டுப்பாடுகள் அமுல்



பீஜிங்கில் வசிக்கும் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள சீன அரசு முடிவு செய்துள்ளது. சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கொவிட் - 19 வைரஸ் 228 நாடுகள் மற்றும் பெருநகரங்களில் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

உலக நாடுகள் கொரோனாவை சமாளிக்க முடியாமல் தடுமாறிய நிலையில், தீவிர ஊரடங்கு விதிக்கப்பட்டு சீனாவில் கொரோனா தொற்று கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தற்போது சீனாவின் துறைமுக நகரான ஷாங்காயில் கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்து வருவதால், அங்கு ஊரடங்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதேபோல் பீஜிங்கிலும் தினசரி கொரோனா பாதிப்பு உச்சம் தொட்டுள்ளது.

இதனால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதுடன், மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். இந்நிலையில், பீஜிங்கில் வசிக்கும் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள சீன அரசு முடிவுசெய்துள்ளது. அதன்படி, பீஜிங்கில் வசிக்கும் 2.1 கோடி பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

ஷாங்காய் நகரைபோல் பீஜிங்கிலும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக பரிசோதனை தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. இதையடுத்து பீஜிங்கில் கொரோனா பரிசோதனைக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சளி மாதிரிகளை வழங்கி வருகின்றனர்.

**இந்தியாவில் ஒரே நாளில் 1,399 பேர் பலி**

இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில், பல்வேறு மாநிலங்களில் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன. பெருந்தொற்றின் 4ஆவது அலை ஏற்படும் என்ற அச்சம் காரணமாக ஜோர்கண்ட் மாநிலத்தில் பாடசாலைகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. நேற்றுக் காலை காலை 9 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்துள் கொரோனா தொற்றால் 1,399 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு 2,483 பேருக்கு புதிதாக தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியா முழுவதும் இதுவரை 4,30,62,097 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5,22,223 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் உலகம் முழுவதும் இதுவரை கொரோனாவால் 51,01,21,273 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 62,45,705 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 4,04,52,394 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன் அவர்களில் 42,432 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மகாராஷ்டிராவில் ஏரிஎம் இயந்திரத்தையே ஜேசிபியில் அள்ளிய கும்பல்: ஆனால் என்ன?



மகாராஷ்டிரவில் பணத்துக்காக ஏரிஎம் இயந்திரத்தை அப்படியே ஜேசிபி இயந்திரம் மூலம் திருடியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் சாங்லி பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஏரிஎம் இயந்திரத்தை ஜேபிசியைக்கொண்டு கொள்ளைக் கும்பலொன்று அப்படியே தகர்த்து, தரையோடு பெயர்த்து எடுத்துச்செல்வது ஏரிஎம்மில் இருக்கும் சிசிரிவி கெமராவில் பதிவாகியிருந்துள்ளது.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு நிகழ்ந்துள்ளது.

ஆனால் நல்வாய்ப்பாக ஜேபிசி இயந்திரம் வீதியிலிருந்து குழியில் சிக்கிக்கொண்டதையடுத்து, கொள்ளையர்கள் ஏரிஎம் இயந்திரத்தையும் ஜேபிசியையும் அப்படியே விட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.


உடனடியாக விரைந்த பொலிஸார், ஏரிஎம் இயந்திரத்தைக் கைப்பற்றியதுடன், அதிலிருந்த 27 இலட்சம் பணம் காப்பாற்றப்பட்டது.

இது குறித்து வழக்குப்பதிவு செய்யப்பட்டு கொள்ளையர்களை தேடிவருகிறார்கள்.



பெற்றோல் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஜேசிபி இயந்திரத்தை கொள்ளையர்கள் திருடி வந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ரவுடிகள் அட்டகாசத்தை கட்டுப்படுத்த எல் சால்வடோரில் அவசரநிலை நீடிப்பு



எல் சால்வடோரில் அதிகரித்துவரும் ரவுடி கும்பல்களில் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த அவசரநிலை நடவடிக்கைகள் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளில் இல்லாதளவாக கடந்த மாதம் ஒரே நாளில் ரவுடி கும்பல்களால் 62 பேர் கொல்லப்பட்டனர்.

அதனையடுத்து அவசரநிலையை அறிவித்த அந்நாட்டு ஜனாதிபதி நயிப் புகேலே அரசு, இதுவரை 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரவுடிகளை கைதுசெய்துள்ளது.

பொது இடங்களில் ஒன்று கூட தடை, தகவல் பரிமாற்றத்தில் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், இவை மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிப்பதாக ஒரு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

# எலன் மஸ்கிடம் கைமாறும் ட்விட்டர்

## ட்ரம்ப் மீதான தடை நீக்கப்படலாம் என பைடன் கவலை



ட்விட்டர் நிறுவனம் எலன் மஸ்கிடம் கை மாறவுள்ள நிலையில், ட்விட்டர் தளத்திலிருந்து தடைசெய்யப்பட்ட அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் சேர்க்கப்படுவார் என ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் கவலையிலுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ட்விட்டர் சமூக ஊடக நிறுவனத்தின் எதிர்காலம் நிச்சயமற்றது, ட்விட்டர் கைமாறும் நிலையில் அது எந்த திசையில் செல்லும் என்று எங்களுக்குத் தெரியாது என அதன் தலைமை செயல் அதிகாரி பராக் அகர்வால் கருத்து தெரிவித்துள்ளார். ட்விட்டர் நிறுவனத்தை எலன் மஸ்க் வாங்கியுள்ள நிலையில் இந்தக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் முறை கேடான முறையில் ஜோ பைடன் வெற்றிபெற்றதாக ட்ரம்ப் குற்றஞ் சாட்டிய நிலையில், அவர் தவறான தகவலை பரப்புவதாக ட்விட்டர், பேஸ்புக் உள்ளிட்ட நிறுவனங்கள் அவரது கணக்கை நீக்கின.

இந்நிலையில், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்குவது கருத்து சுதந்திரம்தான் என எலன் மஸ்க் கருத்து தெரிவித்துள்ள நிலையில், ட்ரம்ப் மீதான தடையை எலன் மஸ்க் நீக்குவாரென வெள்ளை மாளிகை கருதுவதாக கூறப்படுகிறது.

அதன் எதிரொலியாக 2024இல் நடக்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்விட்டர் தளத்தின் தாக்கம் இருக்கும் என ஜனாதிபதி ஜோ பைடன் தரப்பினர் கருதுகின்றனர்.

# பிரேஸிலில் களைகட்டும் ரியோ திருவிழா: பார்வையாளர்களை பரவசமூட்டிய சம்பா நடனம்




ரியோ திருவிழாவால் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. கொரோனா கட்டுப்பாடுகளால் 2 ஆண்டுகளாக நடைபெறாத ரியோ திருவிழா இந்தாண்டு வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சம்பா நடனக் குழுக்கள் வண்ண வண்ண ஆடைகள் உடுத்தியபடி நிகழ்த்திய நடன நிகழ்ச்சிகள் மற்றும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பை பல்லாயிரக்கணக்கானோர் ஆரவாரம் செய்து உற்சாகத்துடன் கண்டுகளித்தனர்.





# ஐந்து வருடங்களின் பின்னர் ஆசிய சாதனையை முறியடித்த யுபுன்

தென்காசியாவின் அதிவேக வீரரும், இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரருமான யுபுன் அபேகோன், கடந்த ஞாயிறன்று இத்தாலியில் நடைபெற்ற பெர்சோ டிராபி - 2022 போட்டித் தொடரில் ஆண்களுக்கான 150 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பிடித்து அசத்தினார். குறித்த போட்டியை 15.16 செக்கன்களில் நிறைவுசெய்த அவர், 2017ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டு வீரர் யோஷிஹிடே கிரியு 15.35 செக்கன்களில் ஓடி முடித்து நிலைநாட்டிய ஆசிய சாதனையை 5 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்து சாதனை படைத்தார்.

இந்தப் போட்டியை 15.17 செக்கன்களில் நிறைவுசெய்த இத்தாலி நாட்டு வீரர் சிட்டுரு அலி இரண்டாவது இடத்தையும், அதே நாட்டைச் சேர்ந்த மட்டியா புர்லானி 15.76 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இதனிடையே, குறித்த போட்டியில் பங்குகொண்ட இலங்கையைச் சேர்ந்த மற்றுமொரு வீரரான வினுர லக்மால், 16.83 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்தார்.




# இலங்கை றக்பி–7 அணியில் கண்டி வீரர்கள் 8 பேர் தெரிவு



ஜூலை 28ஆம் திகதி ஆரம்பமாகும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் பங்குபெறவுள்ள இலங்கை றக்பி-7 அணியின் தலைவராக கண்டி அணி வீரர் ஸ்ரீநாத் சூரிய பண்டார தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 20 பேர் கொண்ட குழாமில் கண்டி அணியைச் சேர்ந்த இதர வீரர்கள் எட்டுப் பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். இலங்கை றக்பி சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி அணியில் கண்டி அணி வீரர்கள் 8 பேரும் ஹெவ்லொக்ஸ் மற்றும் சீ.எச். அணிகளைச் சேர்ந்த தலா மூவரும், விமானப்படை மற்றும் கடற்படை அணியைச் சேர்ந்த தலா இருவரும் பொலிஸ் மற்றும் இராணுவ அணியைச் சேர்ந்த ஒருவர் வீதமும் 20 பேர் கொண்ட அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

**Men's squad (12 players)**

Srinath Sooriyabandara, Tharinda Ratwatte, Nigel Ratwatte, Adeesha Weerathunga, Danush Dayan, Anjula Hettiarachchi, Mithun Hapugoda, Kavindu Perera, Buddhima Piyarathne, Sudaraka Dikkumbura, Reza Rafaideen, and Chathura Senevirathne

**Standby players (eight)**

Lasindu Karunathilake, Iroshan Silva, Ovin Hettiarachchi, Avishka Lee, Heshan Jansen, Ramesh Fernando, Sudam Suriyaarachchi, and Dilushka Dange

# பனிக்கட்டிகளுக்கு அடியில் நீந்தி கின்னஸ் சாதனை



தென்னாபிரிக்காவைச் சேர்ந்த அம்பெர் ஃபிலாரி என்ற பெண் தற்போது இரண்டாவது முறையாக பனிக்கட்டிகளுக்கு அடியில் 295 அடி 3 அங்குலம் தூரம் நீந்தி புதிய கின்னஸ் சாதனை படைத்திருக்கிறார்.

கின்னஸ் சாதனை புரிந்துள்ள இவர், இரண்டு வருடங்களுக்கு முன் நோர்வேயில் 229 அடி 7.9 அங்குலம் தூரம் நீச்சல் அடித்து கின்னஸ் சாதனை படைத்திருந்தார்.

பனிக்கட்டிகளுக்கு அடியில் அவர் நீச்சல் அடிக்கும்போது துடுப்புகளையோ அல்லது டைவிங் சூட்டையோ பயன்படுத்தவில்லை என்பதுதான் இப்போதைய சாதனையின் கூடுதல் சிறப்பு. இது அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியுள்ளது. இவர் ஊக்கப்படுத்தும் பேச்சாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# "ஐ.பி.எல். பணம் உறவுகளை முறித்துவிடும்" – சைமண்ட்ஸ்

*(ரமணி)*

முன்னாள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் மிகவும் நிகழ்வுகள் நிறைந்த வாழ்க்கையைக்கொண்டிருந்த ஒருவர். களத்தில் இருந்தபோது, விளையாட்டில் சிறந்த ஓல்-ரவுண்டர்களில் ஒருவராக அவர் தனக்கென ஒரு பெயரைப் பெற்றார், ஆனால், அவுஸ்திரேலிய அணியுடன் அவரது நேரம் களத்துக்கு வெளியே நெடிய சர்ச்சைகள் நிறைந்ததாக இருந்தது.

சைமண்ட்ஸ் ஐ.பி.எல்லில் அபாரமான திறமையை வெளிப்படுத்தினார். 2008இல் நடந்த போட்டியின் தொடக்கப் பதிப்பில், டெக்கான் சார்ஜர்ஸ் மூலம் 1.8 மில்லியனுக்கு வாங்கப்பட்டார். அவர் மூன்று ஆண்டுகள் அணிக்கு ஆடி, 2009இல் பட்டத்தை வெல்ல உதவினார். சைமண்ட்ஸ் ஐ.பி.எல்லிலிருந்து பெறப்பட்ட பணம், முன்னாள் அவுஸ்திரேலிய கெப்டன் மைக்கேல் கிளார்க்குடனான தனது உறவை எவ்வாறு விஷமாக்கியது மற்றும் கிளார்க் போன்ற பிறரிடமிருந்து பொறாமைக்கு அவரது பெரும் பண ஒப்பந்தம் வழிவகுத்தது என்பதை வெளிப்படுத்தினார்.

இது தொடர்பாக பிரெட் லீ போட்காஸ்ட் நிகழ்ச்சியில் ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் கூறியதாவது, "நானும் மைக்கேல் கிளார்க்கும் நெருக்கமாகி விட்டோம். அவர் (கிளார்க்) அணிக்கு வந்ததும், நான் அவருடன் நிறைய பேட்டிங் செய்தேன். அதனால் அவர் பக்கத்தில் வந்ததும், நான் அவரை மிகவும் கவனித்தேன். அது ஒரு பிணைப்பை உருவாக்கியது. மெத்யு ஹெய்டனுக்கும் நான் ஐ.பி.எல். ஒப்பந்தத்தில் பெற்ற பெரிய பணம் பொறாமையைக் கிளப்பியது."

"ஐ.பி.எல். தொடர் தொடங்கியபோது மெத்யு ஹைடன் என்னிடம், எனக்கு நல்ல ஊதியம் கிடைத்திருப்பதால், ஐ.பி.எல். தொடரில் விளையாடப் போகிறேன் என்று தெரிவித்தார். அதேநேரம், கிளார்க்கும், நானும் நெருங்கிய நண்பர்களாக இருந்ததும் அவருக்கு பொறாமையாக இருந்தது. பணம்தான் பல வேடிக்கையாயான விடயங்களுக்குக் காரணம் என்று நான் ஊகிக்கிறேன். பணம் நல்ல விடயம்தான். ஆனால், அது விஷமும் கூட. நம்முடைய உறவில் விஷத்தை கலந்துவிடும். மெத்யு ஹேடன் மீது மிகுந்த மரியாதை இருக்கிறது, என்னிடம் என்ன கூறினார் என்பது குறித்து விரிவாக தெரிவிக்க விரும்பவில்லை. என்னுடைய நட்பு ஹெய்டனுடன் நீண்டகாலம் இல்லை. இருப்பினும் நான் நன்றாகத்தான் இருக்கிறேன். இங்கு அமர்ந்துகொண்டு யார் மீதும் சேற்றை வீச மாட்டேன்."

சைமண்ட்ஸ் பின்னர் 2011 ஐ.பி.எல்லில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காகவும் இடம்பெற்றார். அந்த ஆண்டின் பிற்பகுதியில், விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்கும் முன், அந்த உரிமையாளரின் முதல் சம்பியன்ஸ் லீக் பட்டத்தை வெல்ல அவர் உதவினார். புனே வாரியர்ஸ் இந்தியாவுக்காக 2012 தொடரில் மைக்கேல் கிளார்க் ஆடினார்.



# போராட்டக்காரர்களின் அச்சத்தால் போட்டியில் விளையாடுவதையே தவிர்த்த யோஷித்த

பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழா தொடர்களில் பங்கேற்கவுள்ள அணிக்கு 7 பேர் கொண்ட இலங்கை றக்பி குழாமை தெரிவுசெய்வதற்காக நடைபெற்ற றக்பி போட்டித் தொடரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வாரன யோஷித்த ராஜபக்ஷ பாதுகாப்பு காரணமாக பங்கேற்பதை தவிர்த்திருந்தார்.

குறித்த அணித் தெரிவுக்கான போட்டிகள் கடந்த ஞாயிறன்று கொழும்பு சீ.ஆர். மைதானத்தில் நடைபெற்றிருந்தது. 4 அணிகள்கொண்ட இப்போட்டித் தொடரில் கடற்படை அணி சார்பாக யோஷித்த ராஜபக்ஷ பெயரிடப்பட்டிருந்தார். மைதானத்தைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் எந்நேரம் வேண்டுமானாலும் மைதானத்திற்குள் ஊடுருவலாம் என்ற அச்சம் காரணமாக யோஷித்த ராஜபக்ஷ இப்போட்டித் தொடரில் பங்கேற்பதை தவிர்த்திருந்தார்.

# இலங்கை ஒருநாள் அணியின் தலைவராக மீண்டும் திமுத்

இலங்கை ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவராக மீண்டும் திமுத் கருணாரத்ன நியமிக்கப்படவுள்ளதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

சகலதுறை வீரரான தசுன் சானக்க தற்போது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட அணியை வழிநடத்தி வருகிறார். பல இளம் வீரர்களைக்கொண்டு, இலங்கைக்கு கிரிக்கெட்டில் உண்மையிலேயே பிரகாசமான எதிர்காலம் உள்ளது என்பதை அண்மைக்காலத்தில் இலங்கை அணியால் நிரூபிக்க முடிந்தது.

திமுத் கருணாரத்ன தலைமையில் இலங்கை அணி 16 ஒருநாள் போட்டிகளில் விளையாடியது. இலங்கை அணி 10 போட்டிகளில் வெற்றியும், 6 போட்டிகளில் தோல்வியும் சந்தித்துள்ளது. இதேவேளை, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இரு அணிகளும் ஒரே தலைமையின் கீழ் இயங்க வேண்டும் என திமுத்தின் தலைமைப் பொறுப்பு தசுன் சானக்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், தசுனின் ஒருநாள் போட்டித் தலைவர் பதவி தற்போதைய டெஸ்ட் அணித்தலைவர் திமுத் கருணாரத்னவிடம் ஒப்படைக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையின் ஒருநாள் போட்டித் தலைவராக திமுத் மீண்டும் நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும், இருபதுக்கு 20 அணியின் தலைவராக மாத்திரமே தசுன் சானக்க செயற்படுவார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் ஒருநாள் போட்டித் தலைவர் பதவியிலிருந்து தசுன் சானக்கவை நீக்கிவிட்டு, திமுத் கருணாரத்னவை அணித்தலைவராகக் கொண்டுவருவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தசுன் சானக்க மீதான நம்பிக்கையை இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் கைவிட்டுள்ளனர் என்பதே உண்மையானது.







# "நடராஜன் உபாதையிலிருந்து மீண்டு ஐ.பி.எல்லில் ஆடிவரும் விதம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது" – தமிழக வீரரை பாராட்டிய கவாஸ்கர்




இந்திய கிரிக்கெட் அணிக்காக டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடி புகழ்பெற்றவர் தமிழக வீரர் நடராஜன். அவர் அவுஸ்திரேலிய மண்ணில் நிகழ்த்திய அற்புதங்களை அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியாது. ஆனால், அதன்பிறகு வெகு நாட்களாக உபாதை காரணமாக அவதிப்பட்டுவந்த நடராஜன், தற்போது நடப்பு ஐ.பி.எல். போட்டிகளில் கலக்கி வருகிறார். ஹைதராபாத் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் இவர் ஒவ்வொரு போட்டியிலும் குறைந்தது 2-3 விக்கெட் வரை கைப்பற்றி அசத்தி வருகிறார்.

இந்நிலையில், தற்போது நடராஜன் குறித்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் கருத்து தெரிவித்துள்ளார். நடராஜன் குறித்து கவாஸ்கர் கூறுகையில்,

"நடராஜன் உபாதையிலிருந்து மீண்டு ஐ.பி.எல்லில் ஆடிவரும் விதம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. அவர் யார்கர் பந்துகளை சிறப்பாக வீசுவதில் வல்லவர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், அவர் இப்போது பலவிதமான பந்துகளையும் வீசுகிறார். உபாதையால் அவரை இந்திய அணி இழந்தது. அவர் மீண்டும் தெரிவுப்போட்டி களத்தில் இருப்பார். 16 முதல் 20 ஓவர்கள் வரை பந்து வீசுவதில் அவர் சிறப்பாக செயல்படுகிறார். அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம் பெறுவதை அவர் நோக்கமாக கொண்டுள்ளார்" என்றார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7